# வள்ளியம்மை நாடகம்

பதிப்பாளர்
எ.கலிவரதன்

நெறியாளர்
முனைவர் வீ.அரசு
பேராசிரியர் - தலைவர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
மே - 2006

# வள்ளியம்மை நாடகம்


பதிப்பு

**எ. கலிவரதன்**

நெறியாளர்

**வீ.அரசு**

பேராசிரியர்-தலைவர்


★★★★★


தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை - 600 005.

மே 2006

சுவடியியலும் பதிப்பியலும்
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு
பதிவு எண்:

# நெறியாளர் சான்றிதழ்

முனைவர் வீ. அரசு,
பேராசிரியர் - தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'வள்ளியம்மை நாடகம் எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியைச் 'சுவடியியலும் பதிப்பியலும்' எனும் பட்டயம் பெறுவதற்காக எ.கலிவரதன் அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச்செய்தார் என்றும் இப்பதிப்பு இவர் தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

(முனைவர் வீ. அரசு)

நாள் :
இடம்: சென்னை -5.

# பதிப்பாளர் உறுதிமொழி

எ. கலிவரதன்
கலையியல் நிறைஞர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'சுவடியியலும் பதிப்பியலும்' என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் 'வள்ளியம்மை நாடகம்' எனும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்,

(எ. கலிவரதன்)

நாள் :
இடம்: சென்னை -5.

# நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையில் பயில வாய்ப்பளித்த பேராசிரியரும் துறைத்தலைவருமான **வ. ஜெயதேவன்** அவர்களுக்கு என் நன்றியை முதற்கண் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் சுவடியில் மற்றும் பதிப்பியல் என்னும் பட்டயச் சான்றிதழ்க்கான பயிற்சிக்கு வாய்ப்பளித்து நெறிப்படுத்திய பேராசிரியரும் துறைத்தலைவருமான வீ. அரசு அவர்களுக்கு என் நன்றியை மகிழ்வோடு தெரிவிக்கிறேன்.

என்னுடைய ஒவ்வொரு வளர்ச்சி மாற்றத்திற்கும் ஊன்று கோலாய் திகழ்கின்ற என் பெற்றோராகிய ர. எத்திராஜ் எ.காளியம்மாள், அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூல் பதிப்புப் பணிக்குப் பல்வேறு வகையில் உறுதுணைப் புரிந்த என்னுடைய சக உத்திரத்தார்க்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்

எ.கலிவரதன்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. பதிப்புரை | I-VIII |
| 2. வள்ளியம்மை நாடகம் | 1-59 |
| 3. பின்னிணைப்புகள் | |
| i செய்யுள் முதற்குறிப்பு அகராதி | 60-72 |
| ii சொல்லடைவு | 73-77 |
| 4. துணைநூற்பட்டியல் | 78 |

# பதிப்புரை

இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றின் சங்கமம் என்ற பெருமையுடன் இயங்குவது தமிழ் ஒன்றில் மற்றிரண்டும் தன்னைத் தகவமைத்துக் கொள்கின்றன. இவை வாய்மொழி வழக்காறுகள் செவ்வியல்சார் இலக்கியங்கள் ஆகியவற்றின் தோற்றத்திலிருந்தே நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவைஒவ்வொன்றுக்கும் வளர்ச்சி நிலையில் பல படிநிலைகள் உண்டு.

## நாடகம் விளக்கம்

நாடகம் என்ற சொல் நாட்டியம் என்ற சொல்லாட்சிக்குரிய பொருளில் வழங்கப் பட்டது இயல், இசை சேர்ந்து ஏதேனும் ஒரு கதைதாங்கி நிற்கும் நாட்டியம்-கூத்து நாடகமகும்.

## நாடகம் சொல்லாட்சி

இன்றை கால கட்டத்தில் வழங்கப்படும் கோட்பாடுகள் பலவற்றுக்கும் ஆய்வறிஞர்களால் சான்று காட்டப்படும் பழம் பெரும் இலக்கண நூலான தொல்காப்பியம் தொடங்கி நாடகம் என்ற சொல்லாட்சி காணப்படுகிறது.

சான்றுக்கு சில

நாடக வழக்கிலும் - தொல் பொருள் அக

நாடக மகளிர் - பெரும் (வரி-55

நாடக நயந்தும் - பட்டி (வரி -3)

நாடக மடந்தையர் - சிலம்பு : 22:142

நாடகக் கணிகை - மணி : 4:51

வேறுபெயர்கள்

நாடகம் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு சொல்லாட்சிகளில் வழங்கப்பட்டு வருகின்றன. கூத்து என்ற பொருளில் வெவ்வேறு சொல்லாட்சிகளில் வழங்கப்பட்டு வருகின்றன. கூத்து என்ற பொருளில் வழங்கியமையைப் பெருங்கதை (வாயில் கூத்தும் சேரிப் பாடலும் - 1-37) கூத்து என்ற பொருண்மையில் வழங்கியமையைச் சுட்டுகிற சொக்கம், கரணம், குறிப்பு விறல், அவிநயம், போன்ற சொற்கள், நாடகத்தைக் குறிக்கக் கூடிய வேறு சொற்களாகச் சொல்கிறார் இரா. குமரவேலன் (தமிழ் இசை நாடக வரலா பெருந்தமிழ் , ப. 232)

## நாடகம் தோற்றம் வளர்ச்சி

தமிழ் நாடகங்கள் தொல்காப்பியர் காலத்திலேயே தோற்றம் பெறுகிறது. அவற்றின் வளர்ச்சி இன்றைய நவீன நாடகங்கள் வரையிலான நீண்ட பரப்பைக் கொண்டுள்ளன.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கினும்.

என நாடக வழக்கினைப் பாகுபாட்டிற்கேற்ப அவ்வந்நிலங்களுக்குத் தனித்தனியே கூத்தர்கள் இருந்தனர். என்பதை விறலியர் நாடக மகள் கூத்தர், முதலான சொல்லாட்சிகளால் அறியலாம். இக்கூத்து வகைகளை விபுலானந்தர் பொருத்திக் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

சங்க அருவிய காலத்தில் சிலம்பு, மேகலை திருக்குறள் கீழ்க்கணக்கு நூல்கள் போன்ற நாடகங்கள் இருந்தமைக்கான சான்றுகள் தருகின்றன. சிலம்பில் பதினொரு வகை கூத்து , எண்வகை வரிக்கூத்து, வேத்தியல், பொதுவியல் போன்ற குறிப்பிட்டுச் செல்ல வேண்டியவை.

அடியார்க்கு நல்லாரின் உரை, நாடக இலக்கண நூல்களைக் பட்டியல் இடுகின்றது. சயந்தம், செயிற்றியம் முறுவல், மதிவாணர், நாடகத் தமிழ், விளக்கத்தார் கூத்து,

செயன்முறை குணநூல், கூத்தநூல், என்று குறிப்பிட்டுள்ள நூல்கள் நாட்டியம் பற்றியும் நாடகம் பற்றியும் இலக்கண முறையில் விளக்கம் கூறுவனவாகக் கூறுகின்றனர். இந்நூல்கள் இன்று இருக்திருக்குமாயின் தமிழ் நாடக மரபு இன்னும் செழுமையானதாக இருந்திருக்கும்.

தொல்காப்பியர் காலந்தொட்டு தமிழில் நாடகம் உண்டு எனப் பிற இலகக்கியம் சான்றுகள் வாயிலாக அறிகின்றோமே யொழிய நாடகத்திற்கெனத் தனியான இலக்கியம் 17 ஆம் நூற்றாண்டில்தான் தோற்றம் பெற்றன.

பல்லவர் காலத்தில் மகேந்திர வர்மனின் மத்தவிலாசப் பிரகசனம் சோழர்கால கல்வெட்டுச் செய்திகள் அதற்கு பின் தோன்றிய நளவெண்பா, கலிங்கத்துப்பரணி போன்ற இலக்கியங்களுள் நாடகங்கள் இருந்தமைக்கான சான்றுகளைத் தருகின்றன.

இசை நாடகங்கள்

17,18 ஆம் நூற்றாண்டுகளில் பள்ளு, குறவஞ்சி, போன்ற நாடகங்கள் இலக்கியங்கள் வளர்ச்சி பெற்றன. பின் இசையோட கூடிய கீர்த்தனை நாடகங்கள் வளர்ச்சி பெற்றன. அவற்றுள் இராமநாடகக் கீர்த்தனைகள் நந்தனார் சரித்தரக் கீர்த்தனை

சுபத்திரைக் கல்யாணக் கீர்த்தனை, கபிலைச் சரித்திர கீரத்தனை, முதலானவை குறிப்பிடத்தக்க கீர்த்தனதனை நாடகங்கள்

இசைப்பாடலாகி விருத்தம் கீர்த்தனை தரு திபதை, முதலியவற்றால் அமைந்துள்ள நாடகங்களே இசை நாடகங்கள் உரை நடைப்பகுதி அல்லது வசனப்பகுதி இடையிடையே காணப்படுவதுண்டு நாட்டுப்புறப் பாடல் வடிவங்களும் இவ்வகை நாடகங்களில் இடம்பெறுகின்றன.

இவ்வகையில் புராண கதையை அடிப்படையாகக் கொண்டு இடையியே வசனங்கலந்து இசைப்பாடல்களான நாடகமே வள்ளியம்மை நாடகம்.

வள்ளியம்மை நாடகம் அமைப்பு

1. ஆசிரியர் காலம்

சுவாடிகள் போதுமான அளவிற்கு பாதுகாப்பின்மையால் பல முழுமையாக சிதைந்து போவதுண்டு. அவ்வமையில் இந்நாடகச் சுவடியும் சிதைந்து காணப்பட்டிருந்தன. ஆசிரியர் பற்றிய குறிப்புகளைக் குறிப்பிடவில்லை. இந்நாடகம் ஒரு கீர்த்தனை நாடகம் 18 ஆம் நூற்றாண்டில் தான் கீர்த்தனை

நாடகங்கள் வளர்ச்சி பெற்றன. அவ்வகையில் இந்நாடக ஆசிரியரும் 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவராக இருக்கலாம்.

## சுவடி அமைப்பு

இந்நாடகம் 42 பக்கங்களைக் கொண்ட தாள் சுவடிகளில் அமைந்துள்ளது. சுவடிகளிலிருந்து பெயர்த்து எழுதினோர்கள் பாவடிவம் சிதையாமலிருக்க, சுவடியில் உள்ளவாறே பெயர்த்துள்ளனர். சுவடியல் உள்ளவாறே பெயர்த்துள்னர். ஆனால் அவை சில இடங்களில் பாவடிவமும் சில உரைநடை வடிவமுமாக அமைந்துள்ளது. தரு, திபகை, நாகத்தரு போன்ற பலவகையான ராகங்களின் இடையிடையே வசனமும் அமைந்துள்ளது.

## சிறப்பு

### வருணனை

நாடகங்களில் வருணனைகள் சிறப்பிடம் பெருகின்றன. அவ்வகையில் இறைவனை வருணித்தல் நாடக மாந்தர்களை வருணித்தல் இயற்கையை வருணித்தல் எனப் பல்வேறு வருணனைகள் இடம்பெற்றுள்ளன.

உதாரமாக நாடகத் தொடக்கப் பாடலிலே இறைவனைப் புகழ்ந்து பாடுகின்றபோது

திருநகர் தணிகைமேவும் சிவனஞ்சுதன் வேலர்மீதில்
அருந்தமிழ் நாடகத்தை அம்பு விதனிலேபா
வரும் வினையகத்து எங்கள் வாம்புலியூரில் மேவும்
கரிமுகக் கடவுளான கணபதி காப்புத் தானே

என வருணிக்கின்றனர்.

புராணச் செய்தி

முருகன் குறவர்குல பெண்ணாகிய வள்ளிமீது காதல் கொண்டு மணம் புரியும் செய்தியைக் கருவாகக் கொண்டு இந்நாடகம் இயங்குகிறது.

பேச்சுவழக்கு

கீர்த்தனை நாடகங்களில் நாட்டு புற வழக்காறுகள் காணப்பெறுவது இயற்கையே. அவ்வகையில் எளப்பு, முழுங்கி, சேதி, வாருமைய்யா சுவாமி போன்ற பேச்சு வழக்குச் சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

யாப்பமைப்பு

அகவல், ஏலஞ்சிந்து திபதை, உதயராகத்தரு, தரு, ராசத்தரு, ரூபகத்தரு, பைரவத்தரு, சிங்காரத்தரு, முகாரிராகத்தரு,

விகாரத்தரு, கல்யாணராகத்தரு, வேறுதரு, ஓடத்தரு, தோடிராகத்தரு, கண்டராசத்தரு, நெடியத்தரு, நீலாம்புரி தரு எனப் பதினெட்டு வகையான ராகத் தருகளின் இடையிடையே வசனங்கள் அமைந்து காணப்படுகின்றன.

பதிப்புச் சிக்கல்

சுவடிகள் ஆங்காங்கே சிதைந்து காணப்படுவதால் சில சொற்கள், சில வார்த்தைகள் மறைந்து காண்ப்படுகின்றன. அதோடு நெடில் எழுத்துக்கள் குறிலாகவும், குறில் எழுத்துக்கள் நெடிலாகவும், வல்லின றகரத்திற்கு இடையின ர கரமும் றகர னகரத்திற்கு டகர ணகரத்தையும் பயன்படுத்தப்பட்டுள்ளனர்

உதாரணமாக

சந்தணம் - சந்தனம்

கிணறு - கிணறு

இவ்வாறான இடைத்தவறுகளைப் பதிப்பாளர் என்ற முறையில் திருத்திப் பதிப்பித்துள்ளேன்.

# வள்ளியம்மை நாடகம்

திருநகர் தணிகைமேவும் சிவனஞ் சுதன் வேலர் மீதில்
அருந்தமிழ் நாடகத்தை அம்புவி தனிலேபா
வரும் வினையத்து (ற்று) எங்கள் வாம்புலியூரில் மேவும்
கரிமுகக் கடவுளான கணபதி காப்புத் தானே. 1

## தேவீசகாயம்

அற்புத னாவிள்ம்பியாண்டி வச்சுதரா யனுளில்
இப்பவி மேஷ மாதத்திர பத்துரெண்டு நாளில்
பொற்பகை அருளான் சேயன் புலிப்பாகை கருணைமூர்த்தி
ஆசுடன் மதுரம் சித்ரம் அறிந்தவன் பாதம்போற்றி
பாசமாய் ஆனாங்கூர் வாழ்பச்சைய பிள்ளையாளோன்
நேசமாய் தவத்தால் வந்த நீதியாங் குமனபூபன்
வாசமாய்ச் சொன்ன நாமகம் வரும் பிழை பொறுக்க
சரணம் சரணம் சரணம் சுரேந்திர சண்முகசரணம்
மூஷிகவாகனா சரணம் சிவசுதலோகநாயகா சரணம்
வல்லிபை நாயகாசரணம் அமரதிசரதன மீட்ட
வேலனே ஆறுமுகா சுப்பிரமணியனே குமரகுருபர
உமையாள் மைந்தனே குறத்திவள்ளி பங்காளனே சரணம்
ஆதியாயுமை பாலனே சிவ அருணை வாழ்முருகேசனே

நீதியாய் பிணியகற்றும் வேலவா நின்மலர்க்கு

உபதேசனே சரணம்

கங்கை மைந்தனே குமரகுருபர கன்னி பாங்காளனே

செங்கை வேல்தனை தரித்த முருகனே சோதிவாழ்

முருகனே சரணம்

2

**அகவல்**

புள்ளி மானினற் பூங்கொடியென்றும்

வள்ளியை வேலர் மருவியணைய

உந்தனை துதிக்க ஒயர்கதிர் வடிவாய்

வந்துமுன் தோன்றிடும் மதகெச கெளிரே

தஞ்சதமன்றுனது தாள்தனை பணிவேன்

ஐந்துகரனே அடியேன் ஒரு விண்ணப்பம்

திருமகள் மொழியால் தேவர்கள் பதியில்

தருமிக வேண்டிதானும் எதிரா

மனமொரு ரூபமாய் வானுலோகதனில்

காமலைனக் கண்டு களிப்புடம் பொரிதீ

கற்பகம் பெத்திர காவினில் புகுந்து

அற்புதமாக அதனை வேர்கிளைந்து கொண்டு

பால் கடலில் கோதைபாலேக் கண்டு
மாலாகி கருங்குழைவி புதை
மாயகைக்காவில் மருவியணைய நேயமாய்
குமரி பிறக்கவே நெடியோன் வெலவர்

கின்று வெகருடன் பொண செலவிழீ
விபுதை தெருவையை யேந்தி
வந்து நாள்மூன் றுவயத் தாயவள்
கந்தர் மோகம் கனகவே கொண்மு
பந்து கடித்து பாவையும்யலாய் நாரதன்
மொழியனாயகி குமரி பாரதனில்
மணங்கள் பரப்பவே புரிந்து தவமது
புரிய கண்முகர் தோன்ற புவனமே

வனங்கள் புகழதாய் யுரைத்க
அன்னமே வெளிமலையிட மதனில் மானிட
சேயாய் புரந்திடும் வனத்தில் தானவர்
கண்டு களிப்புடன் யெடுப்பார் அங்கினில்
உன்னை வந்து நான் அணைவேன்
பங்கைய முகத்தாள் வேலரை பணிந்து
புள்ளிமான் செயாய் பொரந்திடும் வனத்தில்
வள்ளிக் குழியில் வளரவே வனத்தில் வேடருங்கண்டு

வெகுதவ தாயளடுத்து பாலுகள் ஊட்டி
பக்குவமாய் வளர்த்து காடலை
தினையை தாரேன் அமைக்க
கன்னிதன் அழகை கண்டு
நாரதனும் உன்னி தமாக
உரைக்கவே முருகன் நாடியே
உரைக்க நாயகி வடிவை
தேடியே வனத்தில் தெருவையை

காண வேடனைப் போல்
வேஷமுங் கொண்டு யெடவளக்
குழலாய் யிருக்கிற வனத்தில்
வேலருமயலாய் வேங்கையை நீன்று
சாலவே கிழவனாகியே தடத்தில்
கரிதனை யழைத்துக் கன்னியை மிரட்ட
வனத்திலே நினைந்தவள் மதுவாகி மனத்துயராறா
கமயில்வர அப்போது காவனில் புகுந்து

களவிலே கொடுபோய் மேகவே வேடர்
விழித்தவர் பாத்து துள்ளியே குரவர்
துடந்து தான் வருக கள்ளனாரடியை
பின்னவர் பிடித்து வேலரைக் கண்ட வேடரும்

வெகுண்டு கோலனுங் கனையால் குமரரையெய்ய
கந்தரும் மகிழ்ந்து கண்புரிந்தே கவர்ந்திடும்
வேடர் மடியவே வெள்ளி அன்னையும் பிதாவை அவள்
நினைந்துருகீ என்னிட பிதாவை யெழுப்பிடுமென்ன

அந்ததோர் சமையம் அறிந்து நாரதனும்
வந்து தான் வேலவர் மலரடி வணங்கி
யெரியபூ வந்தும் யீசுனார் சுதனை
அறிவில்லா உயிரை அருளுவ்ரென்ன
இளையவளே கந்து யெழுந்திருமென்ன
வள்தடி கொண்டு மறவரும் எழுந்து
இவ்வனை தடியால் யெறிவனாம் என்ன
அவ் விட மதனில் ஆறுமுகர் ராகி

கொஞ்சியே மயிலில் குமரருந்தொண்
அஞ்சியே வேடர் அடியேனை பணிந்து
கந்தனே எந்தன் கன்னியே உமக்கு
சந்தனாம் என்று தாள்தனை பணிய
நாரதன் மகிழ்ந்து நல்மண முகுறத்தம்
பாரதனில் மணங்கள் பாங்குடன் செய்ய
இந்திரன் மகளிர்க்குயினி வேலர் யுரைக்க
சிந்தையில் (வெ) குண்டு கினத்தவளுக்கு

காப்புடை விழுயால் கண்ணுஞ்சி வந்துரைக்க
    ஆறுமுகவர் அணைந்த வருக
மறுத்துயராத்தி வாவென அழைக்க
    அலர்வுமான அருந்துய ராத்தி
வெளி மாமலையில் வேடர்கள் வளத்த
    வாளினின் விழியால் வள்ளியார் தமக்கு
காலுகள் நாட்டி கைவளை பாம்பி
    சந்தன மரத்தாலேதான் காலுக நாட்டி

விந்தை யுடனே வேடிக்கை யாக
    மறையோர்கள் வந்து மந்திரஞ் சொல்ல
வேதனும் ஞமம்வே கருடன் செய்ய
    போதவே அமரர்கள் புஷ்பமே சொரிய
பாலிகை வாரி பாவையர் தெளிக்க
    தாலியும் தரித்தார் சரவணப் பெருமாள்
செலவிழி வள்ளி சிறுவிரல் பிடித்து
    தீவலம் வந்து தேவர்கள் உடனே

மிக்கமை தெருந்து விமலன் ஆருடனே
    தக்கதோர் செந்தியில் தான் வலம்புரிந்து
அவரவரர் பதிக்கி அமரரும் போனார்
    துவரி மொழியாள் வள்ளி துண்பனார் வேலர்

அருவை யாந்தைவனை அவளுடன் மருகி

மூவரும் வாழ்ந்ததோர் கதையே வேகருடன்

போளுர் வேலவர்க்குருளி தீரு

வேணும் பொரூர் செய்கருணேசன் மூர்த்தி தன்

புதல்வன் முனியனின் பவனும் கீர்த்தியாய்

துதிக்க கேசவன் மருகன் வானவர்

தலைவன் வல்லபை மானவன்

ஆனைமுருகவன் ஐங்கரன் காப்புத்தானே

3

**கவி**

குறவரும் குறத்திமாரும் கோடாலி கொடுவாள் கொண்டு
வனமது வேலிகட்டி வளமுடன் புனம் விரைத்து அணிகளும்
கிளிகள் மான்கள் அரிந்திடா திருக்க வென்று
களிவுடன் பறவை போட்டுக் காவலாய் வைப்பதானால் 4

**வசனம்**

அகோ வாருமையா சுவாமி சிற்றூர் குறவர்கள் ஏழுபேரும் வெளிமாமலையிலே தினைப் புனம் விரைத்து வள்ளிநாயகியும் தாரி சனகியும் ரெண்டு போரும் தினப்புனம் காற்க்கவரு குராய்யா சுவாமி.....

**கவி**

மானினம் ஈன்ற மாது மங்கையார் வள்ளியாரும்
தேன் மொழி சனகிகூட தினப்புனம் காவலாக
கானவர் குறவர் தந்த கைதனில் கண்டுங் கொண்டு
கானவர் தேவர் காணக வள்ளி நாயகியும் வாராள்

**வசனம்**

வள்ளி நாயகியும் தாதி சனகியும் வருகுற விதம் எப்படியென்றால்....

**தரு**

வந்தாள் வள்ளி நாயகி இதோ - சபைதனிலே
வந்தாள் வள்ளி நாயகிதோ.
குத்து முலைகள் மிதில் முத்து சரங் குலிங்க
சித்திரமதன கணையால் மெத்தவிரங்கொண்டு - வந்தாள்
வந்தாள் வள்ளிநாயகி வளையல் கரகலென்ன
அந்த தன்டைகாவில் கொஞ்ச அவுசு சொவுசுடனே - வந்தாள்

சின்னயிடைது வளசிம்பு கலகவென
வன்னப்பணிகள் பூண்டு வந்த வள்ளிநாயகி - வந்தாள்
நெத்தியில் திலகமிட்டு சீல வர்ணபட்டுத்தி-குத்து
முலைமீதில் ரத்தின கொந்தள பணிகள் பூண்டு - வந்தாள்
வள்ளிநாயகி

தெங்கமே மயிலே தேனே - தையலே சனகியாரே
பொங்கர வனத்தில் குள்ளே - புனமது கார்க்கவென்று
மங்கையே நம்மையிப்போ - மறவர்கள் போகவின்ரார்
அங்கையால் கிளிகளோட்ட அருவையே வாருமென்றாள் 6

**வசனம்**

வாருமம்மாள் சானகியாரே நம்மை தினப்புகை காக்க அனுப்பினுார்கள் ஆகையால் நீயும் வருவையோ சொல்லும்மாள் தாயே அப்படியே தரும்மாள் தாயே...

**ஏலஞ்சிந்து**

நன்னா நானா நானா நன்னா தங்கமே
மயிலே தேனே தையலரை தாதியாரே
அங்கவள் கியிகளோட்டவே என் தாதியாரே
அருவையரே- போவோம் நீ வாராய்

சங்கரங்கனிகள் ஏந்தும் சிவன் மகன் தன்னை - வேண்டி
அங்கவள் கிளிகள் ஓட்டவே - என் தாதியாரே
அருவையரே போவோம் நீ வாராய்
கந்தரைப் பணிந்து பொத்திகையிதனில் கண்டெழுத்து...
அந்தமாங்கிளிகள் ஓட்டவே என் தாதியாரே
அருவையரே போவோம் நீ வாராய். 7

**திபதை**

அருவையே தாதியாரே அரிங்கிளியாளே கேளாய்
வருவினை தீர்க்கும் வேலர் மலர்ப் பதம்மன தில்கொண்டு
யீருவருங் கவுண்டை வாங்கியே நீயே பறணில் நின்று
வருங்கிளி மெயிந்திடாமல் - வளர்புனகாற்ப்போம் வாராய் 8

**வசனம்**

வாரும்மாள் சனகியாயே இந்தப் பந்தலில் (ன்) பேரில் ஏறிக்கொண்டு புனத்திலே கிளிகள் வந்து மேயிது ஆகையால் ஆயலோட்டிக் கொள்ளுவோம் வாருமாள் அப்படியே நல்லதம்மாள் தாயே.

**ஓ[உ] தய ராகத்தரு**

ஆலோலம் கிளிகளாலோல (ம்) அன்னை மயிலினங்கள்
ஆலோலம் காடைக் கழுவாலினங்களாலோலம் கைலாச
பட்சிகளாலோலம் மாடைப்பி (பு) ளூஅன்னங்க
ளாலோலம் அந்திளு பட்சிகளா ஆலோலம்
ஆடிப்பறந்து வருங்கிள்ளைகளாம்

ஆகாச பட்சிகளா ஆலோலம் நாடித் தினப்புனத்தில்
மேயாதே கிளிகா நாவரண்டு போகுதைய்யோ
ஆலோலம் தெரியாமல் காகத்தி(ன்) கூட்டில்
குஞ்சு பொரிக்கும் திருட்டு குயிலினங்கள் ஆலோலம் 9

**திபதை**

ஆலோலம் யீன்ற சத்தம் அம்மைநன் அரவங்கேட்டு
ஞாலமாய் வழி நடத்து நாரத முனிவன் தானும்
வோரொரு சோதிவிட்டு வெளிமாமலைக்கி வந்து
வாறணி வள்ளி பந்தல் நாரதன் வருவர் தானான் 10

**வசனம்**

அந்த சமயத்திலே ஆலோலமென்ற சத்தமான துகைலாச கிரியிலே நாரதர் கேட்டு அறிந்துவேணும் என்று வருகுராரைய்யா...

**ராசத்தரு**

புஸ்தகமும் பூணுலும் போட்ட சிவதாவடமும்
கைதனில் கபண்டலமும் காவிருத்தி ராட்டமுடனே
அய்யர் முனிநாரதரும் அந்தணர் போல் தோன்றினாரே 11

**வேருதரு**

நாரதர் வந்தாரே ஆகார நாரதர் வந்தாரே
நாரதர் வந்தாரி தோபாரும் - நளின சிங்
காரமுடம்கா வியமோதி பைந்தமிழ் சொல்லலே
கந்தர் சபைதனில் நாரதர் வந்தாரே

தெண்டுடன் கபண்டலமும் திருமணி ஒளிவுடம்
மண்டலந் தன்னிலே கண்டதுச் சொல்லவே
அண்டலர் கள்முன்வர் கள்கண்டு கை
தொழுவே நாரதர் வந்தாரே 12

**வசனம்**

நாரதர் வந்து வெளி மாமலையை சுத்திபாத்து வள்ளி நாயகியை கண்ணினாலே பார்த்து இப்படிபபட்ட அழகு படைத்து பெண்கள் ஆளெவரெ வென்று பார்த்து சொல்லுகிறார்.

**திபதை**

அண்டர் கொண் மகளோ வானில்
அரம்பையோ நீலமானோ பிண்டர் அகத்து மாயன்
பூவையோ பொணருமானோ தண்டாளத்து முன்னோ
தாரையோ அருவைதாளோ கண்டிலேன் இந்த
மேனி கன்னிதன் அழகை என்றார். 13

**வசனம்**

இப்படிக் கொத்த அழகு படைத்தவள் (யா)ருக்கு சொல்லலா மென்று நாரதர் எண்ணமிட்டு கந்தசு வாமிக்கி சொல்லவென்று மனதிலே நினைத்து கையிலே இருக்கிற

புஸ்தகத்தை அவிழ்த்து வள்ளிநாயகி அழகை எழுதி கொள்ளுகிறார்.

**ரூபகத்தரு**

கைப்படத்தைத் தானெடுத்து - கணபதியை தோத்தரித்து
செப்பமுடம் வேலவரை சிந்தைதனில் தானினைந்து
நலசத்திரம் வெளிமலை நாரதரும் தானெழுதி
சித்திடை பறணழகும் தினப்புனம் கதிரமுழும்
கண்ணழகும் மூக்கழகும் கதிரவனைப் போல் முகமும்
சின்ன இடையழகும் செவ்வள நீர் காயல் தனமுன்
வன்னமணி கோர்வைகளும் வடிவழகு தேமல்களும்
காதழகும் பல்ளொளிவும் கனிவாய் இதழழகும்
பரந்த விரழழகு பயத்தங் காய் போல் நிறமும்
நீல வர்ண தன்புறை போல் நெத்தியுடன் தன்னழகும்
யெடு புருவமல்லோ எழுத்தாணி கூர்முனை போல்
ஆடும் மயிலது போல் அரசியுட சாயல்களும்
வடிவழகை கண்டெழுதி வாராம் நாரதரும்
கடகி வழி தானடந்து கந்தருட பக்கல் வாரார். 14

**வசனம்**

இந்தப் பிரகாரம் நாரத மகாமுனி வள்ளி நாயகியழகை எழுதிக் கொண்டு வந்து, திருத்தணி நகரிலே வந்து சுப்பராயர் அருகிலே நின்று சொல்லுகிறார்.

**திபதை**

வெள்ளியின் கிரியில் வாழும் விமலனார் தந்த கந்தர்
வள்ளியுண்டங்கே யுத்தாள் மயில்வர உமக்காமென்று
உள்ளத்த சொல்வேன் வெள்ளி மலைதனில் ஒரு வேடப்பெண்
மெள்ளவே சொல்ல நானும் விரும்பியே வந்தேன் என்றார்
15

**வசனம்**

வாருமையா சுவாமி சுப்பனையரே வெளிமாமலையிலே ஒரு வேடப் பெண்ணைக் கண்ணினாவே கண்டு வந்தேன். அய்யாசுவாமி வாரும் பிள்ளாய் நாரதரே வெளிமாமலை யானது எந்த திசையிலிருக்கிறது அந்த மலையிருக்கப்பட்ட இடத்தைச் சொல்லும் பிள்ளாய் நாரதா,

**திபதை**

திருப்பதி கிரிக்குத் தெற்கு
தாடக மலைக்கு மேற்கு
மறுபணி வெள்ளைக் கோவில்
வடக்கினில் தென்பால் கீழ்பால்
நரபதி இவர்கள் சூழ
நடுவினில் சுனையும் உண்டு
மலையிட வன்மை சொல்வேன் 16

**வசனம்**

வாருமையா சுவாமி கந்தசுவாமி தருப்பதி மலையானது திருப்பதிமலை. தாடகையை ராமர் வெண்ணது பெருமுக்கல் மலை மருபணி வெள்ளை கொவிலானது அருணாசலம் வடக்கினில் தென்பாலானது விருத்தாசலம் வடக்கினில் தென்பாலானது விருத்தாசலம் நரபதி சூழப்பட்டது வெளிமலை அய்யா வாரும்பிள்ளாய் நாரதரே மலையிருக்கப்பட்ட இடம் சொல்லக் கேட்டு சந்தோஷமாச்சுது அந்த வெளி மலையானது, ஆராலே உண்டானது சொல்லும் பிள்ளாய்.

**திபதை**

இந்திர செயித்து பேரில் ராமனார் சேனைபோக
அங்குதன் அநுமன் சென்று அவனியில் மலை கொண்டேக
சுந்திர மலையுங் காடும் தூக்கியே போரபோது
விந்தையாம் விரலில் புண்டு விழ்ந்தது வெளிச்சார். 17

**வசனம்**

வாருமைய்யா சுப்பராயரே மீன்னாளிலே ராவணனானவன் சீதையை சிறையெடுத்துக் கொண்டு போக ராமசுவாமியானவர் எழுவது வெள்ளம் வானரத் தலைவருடனே போய் ராவணனுடனே உயித்தம் நெய்கிறபோது ராவண குமாரன் இந்திர சித்து வந்து பெயதுத்து (எதிர்த்து) ராமசுவாமி

சேனைகளை நாகபாசத்தினாலே கட்டிப் போட அப்பேரகு நாயகர் அநுமாரை அழைத்து பூமியிலே சஞ்சீவியென்று மலையிருக்குது எடுத்து வாருமென்று சொல்ல அப்போ அநுமாரானவர் சஞ்சீவி மலை தெரியாமல் பீசியிலே இருக்குற மலைகளை காலினாலேயும் வாலினாலேயும் தோள் மேலேயும் தூக்கிக் கொண்டு வருகிறபோது அநுமாருடைய பெருவிரலிலே பிண்டு விழந்துதையா தவெளிமாமலை. அதுவே பர்வதமாச்சுது அந்த வெளிமலையிலே ஒரு பெண்ணைக் கண்டு வந்தேனய்யா சுவாம், ஆனால் அவளுடருபத்தை சொல்லும் பிள்ளாய் நாரதரே...

**நெடிய ராகத்தரு**

ஆறுமுக்மும் பன்னிருகரமும் பன்னிரு விழியும்
பன்னிருதோளும் சீறிய சுராகுலகார எங்கள் சேவகனே
திருமால் மருகா பூரணமாமயில் கார்த்திகையாள்
அவள் புத்திரனே செல்ல கேட்டருளாய்
தேன்றியா தொரு பூவுமில்லை
உயிர் சீவனில்லா தொரு காயம் இல்லை
நீன்றியாதொரு நீரும் இல்லை.

காருமேக மில்லாதொரு மின்னல் இல்லை

நானறியா தொரு தெசம் இல்லை

இப்போ நானொரு அதி செயங் கண்டுவந்தேன்

போனேயொரு புனந்தனிலே ஒரு பூசையரைக் கண்டு

தெண்டுனிட்டேன் வான் அவழ்.

சந்திரன் சூரியரும் இந்த வைய்யமெல்லாம் பெத்த

தாயாவாள் செண்பக பூநிற மேனியளா முல்லை

சேந்த அரும்புகள் பல்லளொளிவாள்

அன்பின் கடல்க் கண்ணி கூர்விழியாளழகாகிய

வெள மதிபோல் முகமாம் கம்ப

மீனத்து உடையழகாள் வள்ளி

கன்னி விரல் கினை காலழகாள்

மின்னகை பறப் பினை லஷணமாம் அந்த

மேவிய லட்சுமிக் கொப்பிடலாம்.

உந்தன் மனத்தை உரிக்க வல்லாள் சிவயோக மனத்திலிருக்க

வல்லாள் தேனல்லவோ செடும் பாவல்லவோ சீனியல்லேத

ரஸ்தாளி யல்லவோ அன்னம் அல்லோ மயில் சாயல்லோ

அழகானவள் உன்னுட தேவி யல்லோ சொன்ன தொல்லாமினி

தெரியுமைய்யா அந்த தோகையை நீ கண்ணில் கண்டாலே

18

**திபதை**

கண்டு நாரத னார் சொல்ல கந்தரும் மனமகிழ்ந்து
அண்ட கோண புதல்வி தன்னை அறிந்து நாம் வருலோமென்ன
தெண்டிரை அழகைச் சொன்ன சேதியும் மெய்யதாக
பண்டுமின் கொண்டு வந்த படமது கண்ணில் கண்டார். 19

**வசனம்**

நாரதர் அழகைச் சொல்லி கையிலே யிருந்த புஸ்தகத்தை அவிழ்த்து காண்பிக்க, அந்த படத்தைப் பாத்து மயங்கினார் அந்த சமயத்திலே அருகிலேயிருந்த தாதி மார்கள் ஒடிவந்து தேவேந்திரன் மகள் தைவயானையுடனே வந்து சொல்லுகிற விதம் எப்படியென்றால்.

**திபதை**

இந்திரன் மகளேநல்ல யெந்திழை தெய்வானை
கந்தரும் நடனம் பாத்து கடுகென யிருந்தாரம்மா
அந்தணன் ஒருவன்வந்து அருகினில் யிருந்தானம்மாள்
வந்திடும் தணிகைவேலர் மயக்கம் தானாம்மா. 20

**வசனம்**

வாருமம்மா தெய்வானை சுப்பிரமண்யர் நடனம் பாத்துப் கொண்டு இருந்தார். ஒரு பிராமணன் வந்து பேசிக்

கொண்டுயிருந்தார் அந்த சமயத்திலே மயங்கி விழுந்தாரம்மா நாங்கள் சொல்ல வந்தம்மா தாயே அப்போ தெய்வானைக் கேட்டு கூந்தலை விருத்துக் கொண்டு வருகிறாள்.

### தோடிராகத்தரு

என்ன செய்வேன் தணிகைவேல் குமாரதேவர்
எழுந்து முகம் சத்தே பார்க்க ஒண்ணாதோ
கன்னியர்கள் மாகை செயித்துண்டா அந்த
காரணங்கள் சற்றும் அறிகிலேனே

வன்னமுடன் மயில் மீதில்வரும் தேவர் மயக்கமான
சேதி அறிகிலேனே சந்தனத்தை வாரி தெய்வானை
சாரவணர்மோல் தான் தெளித்தாள் கும்குமத்தை வாரி
தெய்வானை குமரர் மீதில் தான் தெளித்தாள் 21

### திபதை

அந்தணா நாரதர்கேள் ஆறுமுகர் மயக்கமானார்
என்த(லை) விதியோ காணேன் ஈசனார் புதல்வனாரும்
கந்தரை எழுப்புமென்று கால்தனில் பணிந்து மாது
வந்திடும் முனிவன் சொல்ல மங்கையும் மகிழ்ந்து நின்றாள்
22

**வசனம்**

அந்த சமயத்திலே தெய்வானை நாரதரைப் பார்த்து, வாருமைய்யா நாரதரே சுப்பிரமணியரை எழுப்பி விடுமென்று சொல்ல, நாரதரும் சந்தோஷப்பட்டு கந்தசுவாம் அருகிலே வந்து சொல்லுகிறவிதம் எப்படியென்றால்.

**கவி**

சமவிரன் தன்னில் வந்த சண்முகர் சொல்லக் கேளாய்
குறமகள் வள்ளிபக்கல் குமரரே போரேன் நானும்
வருமயில் தணிகைவிட்டு வருவிரோ யெந்தன் பின்னே
அறுமுக வாருமென்று அந்தணன் எழும்பலுத்தார் 23

**வசனம்**

வாருமையா சுவாமி வேல்முருகா வெளி மலைக்கி வள்ளிநாயாகி பக்கலுக்கு போரேன் நீர் வாரீரோ சொல்லுமையா சுவாமி அப்படியே நானும் வருகிறேனென்று எழுந்திருந்து சொல்லுகிறார்.

**திபதை**

நாதரன் சொல்லக்கேட்டு நலந்தருங் கந்தனாரும்
பார்தனில் மயலதாகி பாவையே நினைவு கொண்டு
வேறொரு சோதியிட்டு வெளி மாமலையில் வந்து
தாரணி தனிலே வேடன் வேஷமே கொள்வதனார். 24

**வசனம்**

நாரதர் சொன்னவுடனே சுப்ரமணியர் வேடன் வேஷங் கொள்ளு கிறவிதம் எப்படி என்றால்...

**திபதை**

காமனார் மேனியாகி கரத்திலே சேலையை யேந்தியே
மாமாந தட்டிகட்டியே சந்த வெண் சாந்தி பூசி
தாமநேர் முடியின் மீதில் தழைகளை பணிந்துக் கொண்டு
பூமனார் மருகனாரு புனதனில் நோக்கி சென்றார்

**வசனம்**

இந்தப் பிரகாரம் சுப்பராயர் வேடரூபத்தை எடுத்து வள்ளிநாயகி பினத்துக்கு வருகிறவிதம் எப்படி என்றால்...

**ஏசிலந்து**

பட்டு சிகதொடுகட்டி கச்சை மின்னே தொங்கவிட்டு
அச்சம் இல்லாவேடன் போலவே மன்மத
வேடன் அன்புடனே வந்து தோணினார்

கச்சைகட்டி சுங்குமிட்டு காவுமிட்டு பொட்டுமிட்டு
அச்சம் இல்லாவேடன் போலவே மன்மத
வேடன் அன்புடனே வந்து தோனினார்

மச்ச மில்லா பசும் பொன்னால் மாணிக்க மகுடமிட்டு
அச்சமில்லா வேடன் போலவே மன்மத
வேடன் அன்புடனே வந்து தோன்றினார். 26

**வசனம்**

வாரும் பிள்ளாய் நாரதரே இந்த வேஷத்திலேயே அவளை செரை(சிறை) யெடுக்கலாமா சொல்லும் பிள்ளாய். ஆனால் மெத்த சந்தோஷமாச்சுது இந்த ரூபத்திலே போய் எடுத்துக் கொண்டு வாடுமையா சுவாமி...

**ரூபகத்தரு**

காட்டாயோடோ வள்ளியாரே
கதிர் காமந்தாரேனேடா வட்டமத்த பயிர்போல
வாகுரேனே நாரதரே சிந்திடையாள் வள்ளியார்தம்
அவள் தினப்புனத்தை காட்டுமையா

சத்தும் புனங் கண்டேன் ஆனால்
சத்திவேலை தாரேனேடா
குறமகளைக் கண்டேன் ஆனால்
கோழிமயில் தாரேனேடா

வாழவழகை கண்டேன் ஆனால்
என்மயிலை மொள்ள தாரேனேடா
தடமறியேன் நாரதரே சித்த
தயவுவைத்து காட்டுமையா 27

**வசனம்**

வாருமையாசுவாமி நாரதரே அவளிருக்கிற வனத்தை காண்பித்தால் நானேறபட்ட மயில் வாகனத்தையும் தணிகை மலையும் உமக்கு குடுத்து விடுகிறேன். அவள் திணைப் புனத்தை மாத்திரம் காட்டு மென்று மனம்வாடிக் கொண்டு நாரதரும் மன்மதவேடனும் வெளி மலைக்கி வந்து வள்ளி நாயகியைக் கண்டு னிலக்கண்டு செல்லுகிறார்.

**திபதை**

வேடனைப் போலேவேலர் வேஷமுங் கொண்டு சென்று
நாடெல்லாம் வேட்டையாடி களைத்தவர் திருந்து வந்து
நாடினது இவளேயாகும் நன்றெனமனதில் கொண்டு
வாடியே வேலனாரும் வள்ளியை நோக்கிச் சொல்வார் 28

**வசனம்**

வள்ளி நாயகியை வேடன் கண்ணிலே கண்டு வெகுறுந்தோஷப் பட்டு வில்லிலே அம்பை பூட்டிக் கொண்டு சொல்லுகிறார்.

## நீலாம்புரிராகத்தரு

மாலைநான்தான் எயிதேன் ெண்ணே வள்ளியே மயிலே தேனே
கானகத்தில் வந்தமானை கண்டதுண்டோ சொல்
கண்டறியோ மானினத்தை கள்ள நல்ல வேடா கேளாய்
பெண்டுதான் பிடிக்க வந்த பேயா நீ போடா
பேயே நின்று சொன்னாய் பெண்ணே பூவையரே
வள்ளியரே காயதடே வந்த மானைக் கண்டதுண்டோ சொல்
மாயவார்த்தை சொல்லவந்தாய் - மன்மதவேடனை கேளாய்
காயம்பட்ட மானை காணோம் கள்ளவேடப்போ 29

## வேருதரு

கண்டமானை விட்டு போவேனோ பெண்ணே வள்ளி
காயம்பட்டது ஓடிப் போகுமோ மானை மானை
யெண்டு கேழ்குகிறாய் மன்மத வேடாமதியிழந்து
புனத்தில் வந்தியோ மதியிழந்தவர் வேடால்லவோ
பெண்ணே வள்ளி வாய் மதங்களை பேசிபார்க்குறாய்

வாய்மதங்கள் பேசூளாயென்றாய் மன்மதவேடா
காயம்தப்பி ஓடிப் பிடையடா
மாயவார்த்தை சொல்வதேனடி ஆகி பெண்ணே
வள்ளி மானை விட்டால் போரேன் நானடி
மானை தரித்த யீசரல்லவோ மன்மதவேடா

மயங்கி திகைத்து புனத்தில் வந்தியோ
வாதுகூறி எதித்து பேசுளாய் பெண்ணே வள்ளி
வதைக்க போரேன் பரணில் வீழ்த்திட 30

### திபதை

மானை நீதேடிவந்த மன்மதவேடா கேயாள்
தானதுயீசர் கையில் தரிந்திடும் ஒருமானல்லால்
கானதும் ஆய்லோட்டும் கன்னிநான் பெண்மானல்லால்
வாகன மாலைகாணோம் மருவனம் போய் வாவென்றாள் 31

### வசனம்

வாரும் வேடனே மான் வந்துதோ வென்று கேட்டபடி யினாலே மானை தரித்தவர் யீசுப(வ)ரன் இந்த கானகத்திலே யிருக்கப் பட்டவள் நாக்ளொரு பெண்மானச்சுது என்னை புள்ளி மான்மத வேடன் திடுக்கென்று பயந்து என்னமாய் துயரப்படுகிறார்.

### நெடுயருத்தரு

மானை கேட்ட தோஷம் வாய் மகம் சொன்னால்
காண ராமராமர் கானகந் தன்னிலே கள்ளவேடனா
னென்ன ராமராமா இந்த சேதிதனை சந்தும் தெய்வானை
கேட்டா கேட்டாலே ராமராமா திருத்தணி தன்னிலேசேர்

வொளென்னை ராமராமா புள்ளிமான் கேட்டென்ன பேய்
மானைப் போவின்னாள் ராமாமா அந்தவள்ளியார்
சொன்னதோர் வாய்மதம்
கெட்டி ராமராமா கன்னிகாசைக் கொண்டு கானகம்
வந்தேனே ராமராமா என்ன செய்யப் போரேன் ராமராமா
32

**கவி**

எத்தினி விதத்தினாலும் இவள்தனை சிறையே கொள்ள
கர்த்தனார் புதல்வன் வேலர்களைத்துமே நடந்துயிப்பால்
பத்தினி வள்ளியாரை பாங்குட விபாகஞ் செய்ய
சத்தது வேடன்மாறி தவசி பாண்டாரமானார் 33

**வசனம்**

சுப்பிரமணியர் வேடரூபத்தை மாத்திப் பண்டாரவேஷங் கொள்ள, வேணுமென்று அறையிலே காவிழண்டு நரைத்தகிழவன் போலே ரூபத்தைக் கொண்டார்.

**திபதை**

பண்டார வேஷங்கொண்டு பலபுனம் யெல்லாம் சுத்தி
திண்டாடி விழுவார் போலே செடிதனில் மாயிரீகக்க
தெண்டையும் யூணிக்கொண்டு தடமவழிபாத்து மொள்ள
வண்டினி வள்ளிபந்தல் மயிலவர் வந்து சேர்ந்தார் 34

**வசனம்**

அந்த சமயத்திலே சுப்பராயர் பண்டராம (பண்டார) பருத்தபழம்போல் வேஷத்தைக் கொண்டு வள்ளிநாயகி புனத்தில் வருறை விதம் எப்படி என்றால்...

**ஆனந்த கலிப்பு**

சங்கு செகண்டுயுங் கொண்டு நல்லதாவடம
ருத்திராட்சம் மார்பிலே பூண்டு
எங்கும் விபூதி யணிந்து நல்லயிணை
யிலாமயில் தோகை கையில் பிடித்து
செங்கையில் வேலைதரித்த அந்ததித்தணி
வேலவர் ஆண்டிபோல்வாரார் தனதன தனா
செந்துணிதன்னை யுடத்தி நல்ல சிவமலை
மண்டலம் கையில் தரித்து பொந்திய கொலுங்கை
கொண்டு நல்ல புலித்தோலாசனம் புகழுடன்
பூண்டு மந்திர யீதுறைபாடி வள்ளி மாதறைதேடிகாவினில்
வாடி வந்திடும் கானகந்தேடி மெத்த
வாடி தவித்து வழி தெரியாமல்
செங்கையில் வேலைதரித்து அந்த
திருத்தணி வேலவர் ஆண்டில்
போவாரார் தனத்தனதை

**வசனம்**

இந்தப் பிரகாரம் ஆண்டிக்கிழவன் வழிதடம் தெரியாமல் வெளிமலையிலே தினைப்புனத்திலே வருகிறபோது நாதியானவள் பார்த்து வள்ளி நாயகியை அழைத்து சொல்லுகிறாள்.

**தீபதை**

கன்னியே வள்ளியாரே கானகந் தன்னிலே தான்
வன்னமாய் ஆண்டியாரோ வழிதெரியாமல் வாரான்
பின்னுமே புனத்தின் மிதில் புகமுடன் ஆயலோட்டி
அன்னையே அவரைநானும் அழைத்து மேவாரேனம்மா 36

**வசனம்**

வாழும் வள்ளியாகியே பெரிய பாண்டராம (பண்டார) சிவனடியாரை நாம் கண்டால் வணங்கவேணும் ஆகையால் வழி தெரியாமல் தவிக்குனான் அவரை அழைத்து வாடடோ சொல்லம்மா அப்படியே அழைத்து வாரும் மாதாயே.

**திபதை**

அய்யரே தபசியாரே ஆனதோர் காட்டகத்தின்
வையகமெஞ்கிருந்து வருகிநீர் எனக்குச் சொல்லும்
தையலார் வள்ளியாரும் தானது அழைத்ததாளும்மை
மெய்யதாய் சொல்லுமென்ன விர்த்தரும் விளம்பலத்தார் 37

**வசனம்**

வாருமையா சுவாமி நீர் எந்த ஊர், எந்த நாடு, இந்தக் காட்டகத்தில் ஏது காரணத்துக்காக வந்தீர் சொல்லுமையா தவசியான பண்டாரமே - ஆனால் சொல்லுகிறேன் கேளும் பெண்களா...

**திபதை**

பெண்மயில் வள்ளியாரே பூவையே சொல்லக் கேளாய்
இன்னிலம் எமனை கங்கையிருக்குமுன் தும்பை பத்திரி
வண்ணமாய் தீர்த்தமாடி வந்தநான் வெளிச்சாரல்
கன்னியா தீர்தமாட கானகம் வந்தேன் கண்டாய் 38

**வசனம்**

வாரும் பெண்களா நாம் தும்மப்பத்திரி கோதாவரி யமுனை கங்கை யிந்திரத்தங்கள் (இத்தீர்த்த மாடி) ஆடிவந்தேன். இந்த வெளி மலையிலே கன்னியா தீர்த்த மென்று. ஒரு தீர்த்த மிருக்குதென்று பெரியோர்கள் சொல்லிக் கொண்டார்கள் ஆகையால் அந்தத்தீர்த்த மாடவேணுமென்று வந்தேன். வழிதடம் தெரியாமல் மெத்த வருத்தப்பட்டு வருகுறபோது உங்கள் குரல் தொனிகேட்டு வந்தேண்டி பெண்களா.

**திபதை**

கன்னியா தீர்த்தமாட கானகம் வத்தீரய்யா
அன்னிய புலியின் காட்டில் அய்யரே திரிய வேண்டாம்
மின்னிட வள்ளியம்மை விளர் புனத்தரிகில் வந்து
தென்னிரும் தேனும்மாவும் மதி கட்டவே அருந்துமையா
39

**வசனம்**

வாருமையா சுவாமி பண்டாரமே இந்த காட்டகத்திலே அநேகம் மிருகங்களுண்டு ஏதாகிலும் உம்மை கண்டால் முழுங்கிப் போடும் நீர் தெடமாட்டி எங்கள் தில்லைப் புனத்திலே யிருக்கிற திணைமாவும், தேனுமாய் குடுக்குறோம். வாங்கி சாப்பிட்டுக் கொண்டு இருமையா சுவாமி, ஆனால் உங்கள் குலத்தை சாதிகளை சொல்லுங்கள் பெண்களா? ஆனால் சொல்லுகிறேன் கேளுமைய்யா பண்டாரமே.

**தரு**

குலத்தை நீ சொல்லுமென்று கூறுகுறயாண்டி
பலத்தருண்டு வாழ்வார் சில பச்சை மலையாளர்
பச்சை மலை நீலமலை பவழமலை எங்கள் நாடு
கொச்சி மலையாளமது குடியிருப்போம் நாங்கள்

உச்சிமலை தேனழிப்போம் ஒருவர் கையிலாகாது
எச்சான் குலந்தானே எங்குலசாதி குறச்சலில்லா
மதுகுடிப்போம் கூந்தல் கள்ளும் குடிப்போம்
குறக்கத்திலே கூடை வைத்து குறிகள் சொல்வோம்
நாங்கள் காக்கை தின்பார் கழவு(கு) தின்பார்
காட்டோணாண் தானும் தின்பார் கடகருவெளனும்
செண்பகத்தின் குருவியுள்ளாள் தின்பார்
ஆனை முயல் கீரி தின்பார் அவர்களொரு சாதி
எனமுடன் மான்கள் தின்பார் இவர்களொரு சாதி
கானவர்கள் சிலவருண்டு கரடி புலி தின்பார்
நானவர்கள் குலங்களுக்கு நல்ல தெங்கள் சாதி
ஊக்கையிடும் குள்ளநரி உடும்புகளும் தின்பீபாம்
இக்குலத்தில் புத்திலப்படும் யீசகளும் தின்போம். 40

**திபதை**

யீசலும்தின்போமென்று இயம்பின வள்ளி கேளாய்
ஆகையாய் கண்ணா திறத்தம் ஆடவே வந்தேனிப்போ
நேசமாய் வயது சென்று நெடுந்தூரம் நடந்ததாலே
வாசமாய் வள்ளியாரே உயர் பசி தீத்திடாயோ 41

**வசனம்**

வாரும் பெண்ணே வள்ளியாரே எனக்கு வெகுவாய் பசிக்குது ஆகையால் கொஞ்சம் தேனு மாவும் குடுத்து பசியாத்தும் பெண்ணே வாரும் பெண்ணே சனகீ, இந்த ஆண்டிக்கு உன் கையினாலே மாவை குடுத்து பசியாத்தி வாரும்மா. ஆனால் மாவை கொண்டு வந்தேன் சாப்பிட்டு பசியாருமையா சுவாமி வாரும் தாதி சனக் பெண்ணே உன்கையினாலே கொடுத்தால் எனக்காது அந்த வள்ளிநா யகி கையினாலே கொடுத்தால் பசியாருமடி பெண்ணே.

**கண்டராகத் தரு**

ஏழடுக்கு பந்தவிட்டு இரங்கிவந்தாள் வள்ளி நாயகியாள்
தாடி இரங்கி வந்தாள் தண்டை சிலம்புகள்
தானசைய அழகாக குழல் முடித்தாள் ஆண்டியர்க்குத் தினை
மாக்குடுக்க அகலமடி கொ... ஆண்டியர்க்கு கதிர்
கொய்யலுத்தாள் ஓடித்தகதிரை எல்லாம் உத்தமியாள்
மடிகட்டி வந்தாள் கல்லை உரலாக்கி கலக்கொம்பை
உலக்கையிட்டாள் இடித்தாள் தினைமாவை
(பு) டைத்தாளாம் கையதுனால் தேர்க்கு இலையை
கொண்டுவந்து தேன் வாத்துமாவை தான் பிசைந்து
பிசைந்த தினைமாவை பிடிபிடியாகவே தானெடுத்தாள்
வாருமையா ஆண்டியாரே வயிர் பசி

தன்னை தீருமையா அள்ளி அள்ளி
மாக்குடுக்க உன் ஆவலை தீருங்காண் ஆண்டியாரே 42

**வசனம்**

வாரும் பெண்ணே மாவை ஏடுத்தரே இன்னம் வயிர் பசிக்குது. இன்னும் கொஞ்ச மாவை குட்டி பெண்ணே.

**தரு**

வாரி வாரி மாக்குடுக்க வயர் பசிகள் தீரலேயோ
ஏரியடா உன் வயறு எடமில்லா ஆண்டிபோடா
சாலாடா உன்வயறு கங்கை கெட்ட ஆண்டிபோடா
கொளமடா உன் வயறு குணங்கெட்ட ஆண்டியாரே 43

**திபதை**

அரகரா சிவனேயென்று ஆண்டியார் புலம்பக் கண்டு
பரவசமாக நால்ல பாவமே ஆச்சுதென்று
திரமுடன் தேனும் மாவும் தின்னுமென்றெதிரே வைத்தாள்
உருளையாய் திரட்டி மொள்ள உருட்டியே முழங்கினாரே
44

**வசனம்**

இந்தப் பிரகாரம் வள்ளிநாயகி மாவை உருட்டிக் கொடுத்த போது அந்த மாவை பண்டாரம் வாங்கி என்ன சொல்லுகிறார்.

**திபதை**

முழங்கிய கொத்தி மீனை விண்ணிலே அண்ணுந்தாப்போல்
அழங்கணிர் புதைத்து நாரை அது மூக்கி விக்கிளுப் போல்
செழுங் குறவள்ளியார் தாம் திட்டன முகத்தைப் பார்த்து
தழுங்கர தண்ணீர் வேணுமென்று தான் சய்யல் சொன்னார்
45

**வசனம்**

வாரும் பெண்ணே வள்ளியாரே மாவை குடுத்தாயே மார்பிலே அடைத்துக் கொண்டு சீவன் போராப் போலே இருக்குது ஆகையால் கொஞ்சம் சலத்தை குடுத்தால் பிழைப்பேன் பெண்ணே இல்லாவிட்டால் சீவன் போகுதடியென்று சொல்லு குறவிதம் யெப்படி என்றால்....

**வயிரவ [பைரவ] ராகத்தரு**

தண்ணீர் தலிக்குதடி வள்ளியரே
தாகவச மல்லவடி வள்ளியாரே
வீண்ண உணக்காரேனடா பண்டாரமே
சத்தே டுதிக்கி கெழுந்திரடா பண்டாரமே
உன்னாணை நானும் பழுத்த கிழவன் தடி
ஊணி நடக் கறியேன் வள்ளியாரே

கோல்குடுத்து மின்னடப் பேன் பண்டாரமே
சத்தே குனிந்து நடந்து வாரும் தம்பிரானே
வாலபருவமடி வள்ளியாரே - என்னை
வங்கை செய்து நீ இழுப்பாய் வள்ளியாரே
பாசாங்கு பண்ணாதேடா பண்டாரமே - உன்னை
பாரமில்லாத நானிழுப்பேன் தம்பிரானே
கூசாமல் நீ யிழுத்தால் வள்ளியாரே
நான் குருக்கள் நடப்பதில்லை வள்ளியாரே

பேசாமல் வாருமையா ஆண்டியாரே
பெருத்த புலிகளுண்டு தம்பிரானே
இத்தனை தூரமெல்லாம் நடந்தேனே
இன்னம் எத்தனை தூரமுண்டு வள்ளியாரே
சத்துவிடம் போர்ச் சுனைகள் ஆண்டியாரே
அந்தனத் தடாகமுண்டு தம்பிரானே 46

**திபதை**

இத்தனை தூரமெல்லாம் நானது நடந்து வந்தேன்
சத்தது கையும் காலும் சன்னி வாதங்கள் போலே
மெத்தவே பிடித்துக் கொண்டு மேதினி நக்கமாட்டேன்
கத்தலம் விரலை தந்தால் கன்னியே நடந்து வாரேன் 47

**வசனம்**

வாரும் பெண்ணே வள்ளியாரே எனக் கானால் சன்னிவா தங்கள் போலே காலுங் கையும் பிடித்துக் கொண்டு மெத்த வருத்தமாயிருக்குது ஆகையினாலே சுண்டி (டு) விரலே தந்தால் வருகிறேன் பெண்ணே.

**திபதை**

தர்மமா போகுதென்று தபாசி எளப்பை ஆத்தி
வர்மமோ தெனைக்க வந்திர வனந்தனில் ஆண்டியாரே
கர்மமோ பவமோ அந்தக் கர்த்தனார் அருளே யெந்தன்
விரம்மனார் எழுத்தோ காணேன் விதிதனை வெல்லப்போமோ
48

**வசனம்**

அரகர மகாதேவா தர்ம்மாக தேனுமாவும் குடுத்து பசி தீத்து தாகம் தீர்க்க வந்த பாதகமோ என் சுண்டு விரலைக் காதுயென்று வள்ளி நாயகி கோபித்துக் கொண்டு துயரப்படுகிறாள்.

**ரூபகத்தரு**

சுண்டி விரல் தந்தேன் என்றால் தோஷம் வரும் ஆண்டியாரே
தொண்டருக்கு கைகுடுத்தால் தோஷம் யில்லே பொண்ணே
பண்டாரம் தவசியாரே பரியாசம் சொல்ல வேண்டாம்
முந்தாணி யெதந்தாயானால் முன் நடந்து வாரேன் பெண்ணே
முந்தாணி குடுப்பாருண்டோ மோசம் வரும் ஆண்டியாரே
பூமியிலே பேண்கேளோடே பொரக்கலையா ஆண்டியாரே
பாவி நீ இந்த வார்த்தை பாத்து யென்னை சொல்லலாமோ
ஆரிது பொருப் பார் சொல்லாய் அகந்தையான வார்த்தைதாலே
மாரியும் பொழிந்திடுமோ வனங்கொடுமை சொன்னத்தாலே
சூரியன் உதையமாமோ நீ சொன்னக் கடுந்தோஷத்தாலே
நாரியளோ வேசியளோ என்னைநா வெழந்து சொல்லலாமோ
பாதகம் வந்திடாதோ பாவி என்னை சொன்னத்தாலே
அண்ணமார் வேடர் கண்டால் அம்புக் கெரை கொல் 49

**வசனம்**

வாரும் பெண்ணே வள்ளியாரே உங்கள் அண்ணமார் வேடர் என்னை கண்டா வெட்டுவாரோ குத்துவாரோ. ஆனல் உங்கள் அண்ணமார் பெருமையை சொல்லுகிறேன் கேளடி பெண்ணே.

**தரு**

அறுவனெடி பெண்ணே வள்ளியாரே
உங்கள் அண்ணமார்கள் சவுரியத்தை
குத்துவார்கள் பெண்ணே உங்கள்
அண்ணன் கொளமிருக்கு மந்த ஆமையெல்லாம்
வெட்டுவார்கள் பெண்ணே வேடரெல்லாம் இந்த
வேலிலுள்ள அந்த ஆமையெல்லாம்
காட்ட வள்ளிகிழங்கு தின்பார் பெண்ணே
கானகத்தில் வேடர் குடியிருப்பார்
வசட்டமான உங்கள் அண்ணன்மார்கள்
இந்த வனத்திலுள்ள குள்ள நரிகள் தின்பார் 50

**வசனம்**

வாரும் பெண்ணே வள்ளியாரே இப்படிப்பட்ட சவுரியமுள்ள வேடரை வெகு சாமர்த்தியமாக சொல்லவந்தாய் அப்படியல்ல வென்று இப்போ வந்தாரானால் என் கைவிபூதியாலே சபிச்சுப் போடுவேன் பெண்ணே.

**திபதை**

இப்படிக்கொத்த வார்த்தை இனியொரு(த) ரஞ் சொன்னாலே
செப்பிடும் என்களண்ணர் சேதிளைக் கேட்டாரானால்
விரல் பிடித்து இடுங்கையாலே வெகுவதாய் குத்தி கொல்வார்
அப்படியானால் நீரும் அருஞ் சுனை போய் வாவென்றாள்
51

**வசனம்**

வாரும் ஆண்டி கிழவா நரத்தலை படுவாள் என்னைப் பார்த்து சுண்டிவிரல் கேட்டது மல்லாமல் எங்கள் அண்ணன் மாரை அறிந்தவன் போலேயே கட்சியான வார்த்தையை சொல்ல வந்தாய் நான் தினப்புனம் போரேன் நீ உங்கள் ஊருக்குப் போய் வாருமென்று சொல்லக்கேட்டு பண்டாரம் சொல்லுகிறார்.

**திபதை**

மானினம் யீன்ற கண்ணே மங்கையே வள்ளியாரே
நானொன்றுஞ் சொல்லவில்தை நரைத்ததோர் கிழவன் கண்டாய்
தேனுடன் மாவை தந்தாய் செரிக்கினா போலே ஆச்சு
தாகமா தன்னிலென்னை கடிகி நீ அழைத்து போகாய் 52

**வசனம்**

வாரும் பெண்ணே வள்ளியாரே! நான் தள்ளாத கிழவன் சொன்ன வசனத்தை கோங்கொள்ளாதே நீ வெகுசந்தோஷமாய் மாவை குடுத்தாய் நான் வாங்கி உண்டபடி யினாலே எளப்பு வந்து மூடிக் கொண்டு தவிக்கிறபடியினாலே நான் சொல்லுகிற பேச்சுகளை குத்தங்கொள்ள வேண்டாம் சந்தன சுனைக்கி அழைத்துக் கொண்டு போய் தாகத்தை தீத்தால் அநேகம் புண்ணியமுண்டடி பெண்ணே.

**ஓடத்தரு**

சோலைக்குள் நடந்து வாருங்காண் தபசியாரே
ஆன சொனைக் கிப்போய்வரு வோங்காண் தம்பிரானே
கையும் காலுமே பெண்ணே வள்ளி
நடுங்குதே திரேகமெங்கும் எங்குமே நடுக்கு தென்று

சொல்லலாகுமோ தவசியாரே நானும் போரேன்
தினப்புனத்திலே போரேன் போரேன் நின்று சொல்லுகிறாய்
பெண்ணே வள்ளி போக்கி கொள்ளுவேன் பிராணந்
தன்னை போக்கி கொள்ளுவேன் நின்று சொல்லுறீர்

ஆண்டியாரே புனந்தனிலே போரேன் நானுமே
மாவை குடுத்த தர்மமாகவே பெண்ணே வள்ளி
மார்பில் அடைத்து வாடிகளைக்குரேன் பாவி நீ சொன்ன
வார்த்தை யடுக்குமோ எனக்கு மெத்த பண்டு முன் செய்த

பாவதோஷமோ ஆண்டி ஆண்டியென்று சொல்லுகிறாய்
பெண்ணே வள்ளி ஆறுமுகவனார் ஆண்டியல்லடி
வேண்டி கொள்ளலா தணிகை முருகரை
பழனிமேவும் வேலரேந்தனா மாமனல்ல காண்

மாமனான தணிகை வேலரை வள்ளியாரே வரிந்தி
கொள்ளடி பிணிகள் தீரவே சாலஞ்செய்து
கொண்டு இருக்கிறாய் ஆண்டியாரே கடிதி
சுனைக்கி போய் வருவாங்காண் ஆனைகரடி
புலிகள் உண்டாடி இந்த காட்டகந் தனில்
அதித்துகுதிக்துத் தாண்டி வருகுமோ 53

**வசனம்**

வாரும் பெண்ணே வள்ளிநாயகி இந்த கூணனுக்கு அப்புரம் குளுந்த தெண்ணல் வீசுது; அது கண்டு சொல்லவேணும் இது ஆருட வனம் சொல்லுமென்று கேழ்க்க வள்ளியம்மன் சொல்லுகிறாள் வாரும் பண்டாரமே இது தான் வெளிமலை இதுவே சந்தணத் தடாகம் என்று சொல்லக்கேட்டு மகாசந்தோஷப் பட்டு இந்த சுனையைப் பார்த்து சொல்லுகிற விதம் எப்படியென்றால்...

**கல்யாண ராகத்தரு**

அந்த மான பெண்ணே வள்ளி அருவையே சொல்லகேளாய்
நான் இந்த நலம் படிதனிலே எறங்கவும் மாட்டேன்
சந்தனம் புனுகு கெந்தம் தான் வீசுது வீசும் இந்த
நல் படிதனில் எறங்கவுமாட்டேன்
கந்தருட மாயத்தாலே இந்த விதியானதல்லால்
இந்த நலபடிதனிலே எறங்கவுமாட்டேன் 54

**வேறுதரு**

இந்தச் சுனைதனில் எறங்கவுமாட்டேன் நான் வள்ளியாரே
அந்த மாஞ்சுனைதனில் அய்யரே நீரும் ஆண்டியாரே
இந்த சந்தனசுனைதனில் தள்ளவோ பார்க்கிறாய் வள்ளியாரே

பாவத்தை தேடும் பரதேசி நீயல்லோ ஆண்டியாரே
இந்த ஆபத்து வேளையில் நீ பார்த்து சொல்லுகிறாய் வள்ளியாரே
கோபத்தை செய்வார் குமரரும் கண்டாலே ஆண்டியாரே
அந்த குமரருக்கு நான் வந்து குருவென்று பாரடி வள்ளியாரே
மாவை குடுத்தது பாவத்துக்கு ஆளானே ஆண்டியாரே
நீ மாவை குடுத்தது மார்பிலே நிர்க்குது வள்ளியாரே
கள்ள நினைவுக்கும் பொல்லாத ஆண்டிதான் ஆண்டியாரே
நான் தள்ளாத கிழவன் மெள்ள நடக்குறேன் வள்ளியாரே
55

**திபதை**

சுனைதனில் அழைத்து வந்த தோகையே சொல்லகேளாய்
மனமகிழ்ந்து உந்தன் கையால் வாரியே கலத்தை தந்தால்
எனது வாய் கருந்தி நானும் இளப்பது ஆத்தி வைத்தால்
தனம் புகழ் தணிகை வேலத் காதலை தீர்ப்பார் கண்டாய்
56

**வசனம்**

வாரும் பெண்ணே வள்ளியாரே இந்தச் சுனையிரே சலத்தை அள்ளிக்குடுத்தால் சாப்பிட்டு எளப்பு தீருவேன் எனக்கும் பசியாரும் உனக்கும் மோட்சம் உண்டடி பெண்ணே.

**திபதை**

ஆண்டியார் மார்க்கமெல்லாம் அறிந்தேன்காண் உந்தன் சேதி
வேண்டயே புனத்தில் வந்து வெகுவதாய் மாவையுண்டு
நீண்டதோர் வனத்தில் என்னை நீருமே அழைத்து வந்தும்
வாண்டரைப் போலே மயங்கியே சொல்ல வந்தாய் 57

**வசனம்**

வாரும் ஆண்டியாரே உன்மார்க்கம் தெரிந்து என்னை மயக்கி மாவை திண்ணு அநேகம் பாசாங்குப் பாசாங்குப் பண்ணிவெகுவாய் அழைத்து வந்தாய் நல்லது ஆபதைதைக் (த்துக்கு)பாவமில்லையென்று வள்ளியே சலத்தை அள்ளி குடுக்குறாள்.

**தரு**

அள்ளி அள்ளி நீர்குடுக்க ஆவலெல்லாந் தீருமையா
வள்ளி கையால் நீர்குடுக்க வயறு பசிகள் தீருமையா
தெள்ளியச் சுனை நீரெல்லாம் அள்ளியே கரத்தில் தந்தாள்

கள்ள நினைவாலே வேலர் கைநடுக்கி தாழவிட்டார்
தாகமது தீந்தேன் பெண்ணே தையலே நீ சொல்லக்கேளும்
மோகமது கொண்டேன் உன்மேல் மொய்குழலே வள்ளியாரே
ஏகமனதாகக் கூடியிருப்பம் வாராய் வள்ளியாரே
மோகமெல்லாம் உன்மேலாகி பொங்குதடி பூவையாரே
ஆகமுடம் என்னைச் சேந்து அணைந்து என்மேல் கிருபை பாராய் 58

**வசனம்**

இந்த வார்த்தை ஆண்டியார் சொல்லக்கேட்டு வள்ளி நாயகி மெத்த மனது வாடி அண்ணமாரை நினைத்துக் கொண்டு துயர்படுகுறாள்.

## வேறு தரு

பீரழி மீதினில் பள்ளி கொண மாயா ராம ராமா
எந்த பருதாவ மாகிலும் பாராமல் போனீரோ ராமராமா
ஆலிலை மேல் பள்ளிகொண்டருள் மாயனே ராமராமா
எனக் காதரவாரினி ஆருடன் சொல்லுவேன் ராமராமா
ஆனாலும் எனக்கிந்த ஆபத்தை நீத்திடும் ராமராமா
ராமா ராமா வென்று நம்பினேன் உன்பாதம் ராமராமா
எனக்வீமானம் வாராமல் நீ மானம் தந்திடும் ராமராமா 59

**திபதை**

மரிந்திடுங்கள்ள ராண்டி மாயத்த வுருவத்தாலே
தெரிந்திட வசமோ யிங்கே செணமிவன் இருந்தானாகில்
மருந்துனூல் கற்பழிப்பான் மளக்கவே வந்தான் பாவி
இருந்து நீ வாருமென்று எழுந்துமே நடந்து விட்டாள்

**வசனம்**

வாரும் பண்டாரமே; இப்படி வார்த்தை சொன்னபடியினாலே நான் தினைப்புனம் போகுரன் என்று வள்ளி நாயகி போகக் கண்டு பண்டாரம் சொல்லுகிறார்.

**வீகராத்தரு**

மோகமாகுது பெண்ணே மூர்ச்சை வருகுதிப்போ
ஆகமத்துடனே நீ அணைய நீ வாராய்
அணைய நீ வாருமென ஆண்டிக் கிழவனாரே
வனந்தனில் நான் போரேன் வழிவிடும் ஆண்டி யூரைத்தாய்
வழிவிடாய் என்று வனந்தனில் யுதைத்தாய்
பழிவரப்போகுது பகையாகும் பெண்ணே
பகையேது எனக்கிப்போ பரமன் அருளினாலே
தலவன் வகையுடன் மயிலேறு மய்யா
மயிலவர் அருளாலே மங்கையே உன்னை யிப்போ

ஓயிலாய் விளையாடுவோம் ஒகந்து நீ வாராய் - வாராய்
வாராய் இன்று வழி மறித்தாய் ஆண்டி
போரேன் தினப்புனம் போகாய் நீ யாண்டி 61

**திபதை**

பெண்ணினை தரிசித்தார்க்கு போதவே பதவிகுண்ணும்
பெண்ணினை அணைந்த பேர்க்கு ஆயுசு பிரிது இல்லை
பெண்ணினை போற்றியவற்கு பெருமையும் தவங்கள் குண்ணும்
பெண்ணினை இகழ்ந்த பேர்கள் ருழீ பொறுவர் தாமே 62

**வசனம்**

வாருமையா பண்டாரமே பூமி பாரத்திலே பெண்களுக்கு இச்சைகொண்டு மடிந்த பேர்கள் இன்னம் கோடான கோடி யுண்டு தேவர்கள் கூட பெண்களாலே அநேகம் பேர்கள் மடிந்த பேர்களுண்டு ஆகையினாலே உமக்கு இத்ரன பாதகத்தை கட்டிக்கொள்ள வேண்டாமென்று வள்ளிநாயகி சொல்ல பண்டாரம் சொல்லுகிறார்.

**திபதை**

இத்தலம் வெள்ளிச்சாரல் இருந்து நீ கிளிகளோட்டி
மெத்தவே வனத்தில் வாழும் மிருகங்கள் கோடானகோடி
சத்தது புனத்தில் மீதில் தையலே பயங்கள் இல்லாய்
இத்தல மிருகங்கண்டால் எதுக்கு (நீ) அஞ்சுவாயே 63

**வசனம்**

வாரும் பெண்ணே வள்ளியாரே! இந்த வெளிமா மலையிலே இருந்து கிளிகள் ஓட்டிக்கொண்டு இருக்கிறாய் இந்த கானகத்திலே அநேகம் மிருகங்கள் உண்டு எந்த மிருகங்கண்டால் அஞ்சுவாய் சொல்லடி பெண்ணே.

**கவி**

கானகத்து ஆண்டியாரே! கடுகென உரைப்பேன் கேளாய்
வானகம் வெளிச்சாரல் வாழ்கின்ற மிருகமெல்லாம்
தானது கவுண்டுனாலே தலைதனையுடைப்பேன் கேளாய்
ஆனையை கண்டேன் ஆனால் அஞ்சுவேன் அஞ்சு
64

**வசனம்**

வாரும் பண்டாரமே! வெளிமாமலையிலே அநேக மிருகத்தை கவுண்டுனாலே அடிப்பேன் ஒரு யானையைக் கண்டால் பயப்படுவேன் ஆண்டியாலே என்று வள்ளிநாயகி சொல்ல பண்டாரம் சொல்லுகிறார்.

**திபதை**

அண்ணனே தீவனுர்வாழ் ஐங்கரத் தானே கேளாய்
கன்னியார் வள்ளியாரும் என்கைவசம் ஆகவேணும்
தன்னிலே யானையாக தானது எழுந்து பொங்கி
வன்னமாய் தடாகமீதில் வருகுவீர் என்று சொன்னார் 65

**வசனம்**

வாருமையா மகாகணபதீ! தேவர் ஆனையாக வேஷங்கொண்டு வள்ளியார் முன்னே வந்து மிரட்டி எனக்கு சேர்க்கும்படி வாரும் என்று தெண்டனிட்ட போது கணபதியானவர் கேட்டு சந்தோஷப்பட்டு ஆனையாக வேஷங்கொண்டு சந்தன தடாகத்தில் வந்து சலத்தை குடித்தமாத்திரத்திலே அந்த சத்தம் பண்டாரம் அறிந்து வள்ளியாரை அழைத்து பார்க்கச் சொல்ல வள்ளி நாயகி பார்த்து என்ன சொல்லுகிறாள்.

**திபதை**

அரவமே நரைத்து கூனி அரிய சந்யாசியாகி
மறவரை திருநீரிட்டு மயக்கவே புனத்தில் வந்தாய்
உறவுபோல் கொள்வியானீர் உமக்கு நான் தந்தேன் நேர்
தினைப்புனமே போரேன் நீங்கியே நடவும் என்றாள் 66

**வசனம்**

வாரும் பண்டாரமே! இந்த விதத்துக்காக என்னை அழைத்து வந்தாய் என்று ஆனையைக் கண்டு துயரப்படுகிறாள்.

## முகாரிராகத்தரு

அன்னையாள் சனகி சொன்ன சொன்னசொல் மெய்யாச்சுது

ஐய்யோ ராம ரகுராமா

அவள் சொன்ன சொல் கேளாமல் இந்த சுனைதனில்

அழைத்து வந்தேன் ராமா ரகுராமா

சந்நியாசி ஆண்டி தன்னை தானழைத்து

வந்ததேன் ஐய்யோ ராமா ரகுராமா

சறப்பினைகள் செய்து என்னை கற்ப்பழிக்க

வந்தானைய்யா ராம ரகுராமா

கண்ணிநான் இந்தசேதி காட்டகத்தில்

கண்டறியேன் ராமா ரகுராமா

அண்ணமார் வேடர் கண்டால் ஆனைதன்னை

கொண்ணுடுவார் ராமா ரகுராமா 67

## திபதை

ஆனையை கண்டு மாது அலறியே மனது வாடி

கானகந்தன்னில் ஒட்டி கதரியே புலம்பிக் கொண்டு

நான் என்னா செய்வேன் என்று நடுங்கியே வள்ளியாரும்

ஆனையை ஒட்டுமென்று அலறியே கட்டிச் சொல்வாள்

68

**வசனம்**

வாரும் ஆண்டியாரே; உன் மாய் கை எனக்குத் தெரியவராது ஆனையாகப்பட்டாது என்னைப் பார்த்து மெத்த மிரட்டிக்கொண்டு வருகுதென்று பின்னையும் ஆண்டியை கட்டிக்கொண்டு புலம்புகிறாள்.

**தரு**

ஆனையைக் கண்டு அதிர் நடுங்குறேன் ஆண்டியாரே
இந்த கானகந் தன்னிலே கண்டு பயந்தேனே ஆண்டியாரே
கட்டியனையுரேன் கரியானை ஓட்டிடும் ஆண்டியாரே
வள்ளி எங்கே என்று வருகுது யானைதான் ஆண்டியாரே
வந்து என்னை இப்போ வழியை மரிக்குது ஆண்டியாரே

69

**வசனம்**

வாரும் பெண்ணே வள்ளியாரே நான் தளந்த தள்ளாத கிழவன் ஆனையை ஒட்டுவேனே. அந்த யானை என்னைப் பார்த்து கருகுதடி பெண்ணே அப்பாலேபோ என்று பிடித்துத் தள்ளிவிட வள்ளிநாயகி மனதிலே வெகுதுயரப்பட்டு சொல்லுகுறாள்.

**சிங்காரத்தரு**

என்னாநான் செய்வேன் - விதிவசம் ஏதுநான் செய்வேன்
என்ன செய்வேன் வேலர் இனிவரக் காணேன் நான்
கன்னி யொருத்தி நின்று கதறி புலம்புரேன் - (என்னா)
ஏழு குறவர் என்னை எடுத்து வளத்தும் பாலுகள் ஊட்டி
பருவாய் வளத்ததும் என்னா செய்வேன்
வா(பா) ல வயதில் வளர்புனம் காத்ததும் வாதுகள்பேசி
வனத்திலே வந்ததும் (என்னா)
மானும் வயத்திலே மங்கை பிறக்கவும்
கானகந் தன்னிலே கதறி புலம்புரேன்
என்னான் செய்வேன் - விதிவசம் ஏது நான் செய்வேன்.

70.

**வசனம்**

இந்தப்பிரகாரம் வள்ளிநாயகி துயரப்படுகிறதை பார்த்து வாரும் பெண்ணே வள்ளியாரே! என்னை ஆண்டியென்றும் தள்ளாதவன் என்றும் என்னை பரியாசம் சொல்லிக்கொண்டு வந்தாய் அதுவுமல்லாமல் சுண்டிவிரலைக் கேட்டால் நரைத்த கிழவனுக்கோ குடுக்குறது யென்று சொன்னியே ஆகையால் இப்போ ஆண்டியாகுமோ பெண்ணே இன்று நீ பண்டாரம் எகஷயாக சொன்னபோது வள்ளி நாயகிக்கு கோபம் வந்து சொல்லுகுறாள்.

**தரு**

அரகாரயிந்த அபகீர்த்தி வருமென்று அறிகிலேன்
சிவசங்கராயிது ஆண்டி செய்திடுமாய் கையோ
வரும் வழி தன்னில் மாய்கை யென்றறிகிலேன்
வந்த தபசிக்கு இமாவரிந்தியே இந்த காட்சிக்கோ வந்தே நான்
(அரகார)

கானகந் தன்னில் காவல் இருக்கும்போது
கரடி புலிகளும் ஆளிசிங்கமும் கண்டபோது
ஓடிடும் நானைய்யா வெகுநாளாய் தவஞ்செய்தேன்
நாடியிருந்த நான் வேலர் மீதினில் கூடி
வாழ்கலாம் என்று நான் ஏனைய்யா சுவாமி என்மீதில்
கோபங்கள் யிட்டு வந்துன்னை சேர்ந்திடும் அரகரா
இந்த அபகீர்த்தி வருமென்று 71

**திபதை**

கன்னியே வள்ளியாரே கதறிய புலம்ப வேண்டாம்
என்னையே சேர்வேன் என்று எனக்கு நீ வலக்கை தந்தால்
வன்னமாய் ஆனைதன்னை வள்ளியே ஒட்டி வைப்பேன்
சொன்னதோர் மொழிதப்பாமல் தோகையே சொல்லுமென்றார்
72

**வசனம்**

வாரும் பெண்ணே வள்ளியாரே! என்னை சேர்வேன் என்று வலக்கை குடுத்தால் ஆனையை ஓட்டிவிடுவேன் இன்று ஆண்டிச் சொல்ல வள்ளி நாயகி சொல்லுகுறாய்.

**திபதை**

உனக்குநான் மனைவியாய் ஒகந்து வாழ்குவேன்
எனக்கு நீ ஆனையை ஏறவிட்டு ஓட்டிடுமென்று
மனக்குறை தீரவே வனத்தில் புலகுவேன்
கனக்கவே வேலரும் கரங்கள் வாங்கினார் 73

**வசனம்**

அப்படியே உன்னை சேருகிறேன் என்று வலக்கை குடுக்க ஆண்டியானவர் மகாகணபதிக்கி தெண்டன் (ம்) பண்ணி வாரும் அண்ணாவே! வள்ளிநாயகி எனக்கு வசமானாள் தேவர்போய் வாருமென்ன.

ஆணையான மகாகணபதி போன மாத்திரத்திலே வள்ளிநாயகி இந்த ஆண்டியை சே(ர்) ந்து அபகீர்த்தியா குறத்திலேயும் மடிந்துபோரதே உத்தமம் இன்று தலையை விரித்துக்கொண்டு துயரப்படுகிறாள்.

**ரூபகத்தரு**

காட்டிலே யிருந்த யென்னை கவ்வியே எடுத்து நீங்கள்
விட்டிலே கொண்டு வந்து வெகுவாய் வளத்த அண்ணே
நாட்டிலே யானையாலே நடுங்கினேன் அண்ணமாரே
வாட்டமான சுனைதனிலே மடியுரேன் அண்ணமாரே
மாக்குடுத்த தோஷமெல்லோ வந்து நான் மடியுரேனே 74

**வசனம்**

இந்தப் பிரகாரம் வள்ளிநாயகி துயரப்படச்சே ஆண்டி ருபத்தை மாறி வள்ளி நாயகிக்கு எதிரே ஆறுமுகமும் பன்னிரெண்டு கையும் மாணிக்க மயில் வாகனத்திலே ஏறிக்கொண்டு வருகுற விதம் யெப்படியென்றால்...

**தரு**

வந்தாரே சுப்பிர மணயர் மயில் மீதிலே
சுந்தணக்குங்குமம் கெந்தம் சன்பிரமத்துடன்
விந்தையான பஞ்சணை மெத்தை மீதிலே - வந்தாரே
வஞ்சியர்கள் நின்று வெண் சாமரம் வீகவே
விஞ்சு பூண்நூலோர் வந்து வேதமோதவே
பஞ்சினில் மேலடியாள் நின்று பாடியாடலே
செஞ்சொல் மொழி தெய்வானை தேவியுடனே - வந்தாரே
75

**வசனம்**

கந்தசுவாமியை கண்டு வள்ளி நாயகி சொல்லுகுளாள்.

**திபதை**

சரவணை தன்னில் வந்து சாக்குருபரனே போற்றி
அரவத்தை பணியால் பூண்ட அரனுட புதல்வா போற்றி
கரமதில் சத்திவேலை கைதனில் தரித்தாய் போற்றி
வரமருள் தணி கைவிட்டு வந்திரோவின்று வீழ்ந்தாள் 76

**வசனம்**

வாருமையா சுப்பிரமண்யரே! தேவரைக் காண இத்தனை நாள் சென்றுதோ வென்று வள்ளிநாயகி பாதத்தில் வீழ்ந்து சொல்லுகிறாள்.

**திபதை**

மின்னையோர் வேடன் வந்தான் மிரட்டியே மானை கேட்டான்
பின்னுமோர் ஆண்டிவந்து புனத்திலே மாவைதிண்ணு
தண்ணீரை வேணுமென்றான் தனஞ்சுனை அழைத்து வந்து
வன்னமாய் யானையாலே வாடியே களைத்தே னையா 77

**வசனம்**

வாருமையா சுவாமி! என் தினப்புனத்திலே ஒருவேடன் வந்தான் பின்பு ஆண்டிக்கிழவன் வந்தான் மாவை சாப்பிட்டு

சுனைக்கி அழைத்து வந்து ஆணையை விட்டு மிரட்டியில்லாத அபகீர்த்தி செய்தான் ஆகையால் அவனைக்காணோம் ஆகையால் தேவரை கண்டேனையா சுவாமி.

**கவி**

அஞ்ச வேண்டாம் பெண்ணே அருவையே வள்ளியாரே
உன் சொல்லை நாரதந்தான் உரைத்திட நானுங்கேட்டு
வஞ்சனையாக வேடன் வனந்தனில் வந்த நான்தான்
கொஞ்சியே வந்த ஆண்டி குமரரும் நான்தான் பெண்ணே
78

**வசனம்**

வாரும் பெண்ணே வள்ளியாரே! மின்னை வேடனாக வந்தவனும் நான்தான் பின்பு பண்டாரமாக வந்தவனும் நான்தான் மாவை அருந்தி சுனைக்கு அழைத்து வந்தவரும் நான்தான் ஆனையாக வந்தவர் எங்கள் அண்ணன் மகாகணபதியடி பெண்ணே வள்ளியாரே.

**திபதை**

அய்யர் கொந்விதியோ எந்தன் அறியாமல் அடியேன் சொன்ன
பொய்யெல்லாம் பொருத்தீரே தான் பூமயிலடுக்குமோதான்
வையகந்தன்னிலே தான் வார்த்தைகள் பொருத்தீரோ தான்
அய்யரே எந்தன் கோவை ஆறுமுகா உரைத்திட்டீரே. 79

### வசனம்

வாருமையா சுவாமி! நான் சொன்ன சொல்லையெல்லாம் என்னமாய் பொருத்தீரையா சுவாமி...

### திபதை

சொன்னதோர் வார்த்தை யெல்லாம் தும்புரு நாதர் சொல்லாச்சு
வன்னமாய் புனத்திலேகி வளர்புனம் காத்திருந்தால்
கன்னியே சீருர் தன்னில் கந்தரும் வந்து நாமும்
பின்னுமோர் தேவர் காண புகழுடன் விவாகம் செய்வேன்
பொன்னணி வள்ளியாரே போய் வாருமென்று சொன்னார் 80

### வசனம்

வாரும் பெண்ணே வள்ளியாரே! நீ சொன்ன வார்த்தை யெல்லாம் நாரதன் பாடினா பேலே ஆச்சு எனக்கு குத்தமில்லை நீ தினைப் புனத்துக்குப் போய் வாரும் தேவர். களறிய சீருர் பட்டணத்துக்கு வந்து கலியாணஞ் செய்து கொள்ளுகிறேன் போய்வாரும் பெண்ணேயென்று சுப்பிரமண்ணியர் மாய்கையாக மறைந்தார் வள்ளி நாயகி பார்த்துயரப் பட்டுக்கொண்டு வருகுறாள்.

**தரு**

நானாசை கொண்டதும் நீ செய்த வகையேது பஞ்சபாணு
தேவர் வருகு வீரின்று நான் வழிபாத்திருந்தேனே பஞ்சபாணு
நீர்வந்து என்னைக் கண்டு மா (ய்) கையாய் போனீரே-பஞ்சபாணு
காதலை திரகட்டி நீர் சேந்திரோ பஞ்சபாணு
என்னா விபதைக்குது அங்கம் துடிக்குது பஞ்சபாணு
இதை ஆருடன் சொல்லிநான் ஆறவே போரே நான் பஞ்சபாணு
வஞ்சனையல்லவோ மயிலவர் போனது பஞ்சபாணு
நஞ்சபோலாச் சுதோ நான் ஆசை பட்டது பஞ்சபாணு
நெஞ்சுக்குறை தீர நீர் வந்து போனது பஞ்சபாணு

81

**வசனம்**

இந்தப் பிரகாரம் வள்ளி நாயகி அழுது கொண்டு வெகுதுக்கத்துடனே தினப் புனம் வருகுற போது பாங்கியான கனகிவள்ளி நாயகியை காணோமென்று தேடிப்பார்க்கையிலே வள்ளியாரைக் கண்டு சொல்லுகுளாள்.

**பாங்கிகிபதை**

வள்ளிதான் எங்கே போனாய்(ள்) மருவிய பரணைவிட்டு(ப்)
புள்ளிமான் கிள்ளே அன்னம் பொ(பு)ன மெல்லாமேய்ந்துப் போச்சு
எள்ளிய அநேக நேரம் இவ்விடங்காணோம் என்னத்
தெள்ளிய சுனை நீராடித் தெளிந்து நான் வந்தேனென்னாள்
82

**வசனம்**

வாருமம்மா வள்ளியாரே! இந்நேரம் போயிருந்து வந்தாயே புனத்திலே கிளிகள் மான்கள் மேஞ்சுதென்று தாதி கோபித்துக் கொள்ள வள்ளி நாயகி பந்தலின் பேரில் ஏறிக் கொண்டு கிளிகளையோட்டிக் கொள்ளுகிறாள்.

இந்த மட்டும் கதையாச்சுது
சுப்பராயர் துணை
வள்ளி நாயகி துணை உண்டாகவும்

# சொல்லடைவு

## அ


அங்கி 3
அங்குதன் 17
அங்கை 6
அச்சுராயன் 2
அச்சுதன்
அடியேன் 79
அண்டபோன புதல்வி 19
அண்டர் 13
அண்ணன் 50
அண்ணன் 65
அண்ணமார் 49
அண்ணன்மார் 67
அணிகள் 4
அதிசயம் 18
அந்தகாரணங்கள் 21
அந்தணர் 11
அந்தணர் 22
அந்தணர் 23
அம்பு 1
அம்மை 10
அம்மை 9
அமரர்கள் 3
அய்யர் 37
அய்யர் 11
அய்யர் 39
அய்யர் 79
அரசி 14
அரம்பை 13
அரவம் 65
அரவம் 75
அரவம் 10
அரிங்கிளியாள் 8
அருஞ்சுணை 51
அருனை 2
அருந்தமிழ் 1
அருந்துயர் 3
அரும்புகள் 18

அருவை 13
அருள் 48
அவனி 17
அழகு 13
அறுவையர்
அறுவையர் 7
அன்பு 26
அன்னம் 9
அன்னம் 18
அன்னம் 3
அன்னம் 82
அன்னை 9
அன்னை 3
அன்னை 36
அனுமன் 17

## ஆ

ஆகமம்
ஆகாச பட்சிகள் 9
ஆசு 2
ஆசை 41
ஆசை 18
ஆண்டி 61, 35, 43
ஆண்டி 77, 2
ஆண்டி 42, 36
ஆண்டிக்கிழவனார் 61
ஆண்டியார் 64, 57
ஆத்தி 56
ஆத்தி 48
ஆந்தை 3
ஆமை 50
ஆயுசு 62
ஆளிசிங்கம் 71
ஆறுமுக சுப்பரமணியம் 2
ஆறுமுகம் 79, 18
ஆறுமுகர் 22
ஆறுமுகன் 23
ஆணை 67, 68, 40

## இ

இடம் 3
இடையழகு 14
இந்திரன் 3
இந்திரன் மகள் 20

| | | | |
|---|---|---|---|
| இதழலகு | 14 | **க** | |
| இருபத்துரண்டு | 2 | கங்கை | 43,2,38 |
| இளையவள் | 3 | கச்சை | 26 |
| **ஈ** | | கடல்கண்ணி | 18 |
| ஈசன் | 41 | கண் | 3,19 |
| ஈசர் | 31 | கண்ணழகு | 14 |
| ஈசனார் | 22 | கணபதி | 1,14 |
| **உ** | | கதிர் | 4 |
| உச்சிமலை | 40 | கதிரவன் | 14 |
| உடும்புகள் | 40 | கந்தர் | 14,15,12,7,22,20,19 |
| உத்தியார் | 42 | கபண்டலம் | 12 |
| உமையாள் | 2 | கந்தன் | 3 |
| உலக்கை | 42 | கமண்டலம் | 35 |
| **எ** | | கரங்கள் | 73 |
| எமன் | 38 | கரடிபுலியர் | 71 |
| எழுத்தாணி | 14 | கரிமுகக்கடவுள் | 1 |
| **ஐ** | | கரியானை | 69 |
| ஐங்கரன் | 3, 65 | கருடன் | 3 |
| ஐந்துகரன் | 3 | கருணைமூர்த்தி | 2 |
| **ஒ** | | கருணேசன் | 3 |
| ஒயில் | 61 | கருமேகம் | 18 |

கல் 42
கவுண்டு 5,64
கவுண்டை 8
கள்ளவேடன் 29,32
கன்னி 31,3,47
கன்னியர் 65,72
கன்னியர்கள் 21
காக்கை 40
காட்டுமை 27
காடு 17,39,74
காதல் 81
காதழகு 14
காமனார் 25
காய் 14
காயம் 18
கார்த்திகையாள் 18
கால்வழகாம் 18
காவல் 71,4
கானகம் 32,36,64,29,38,68,35
கானடகமுலாவினம் 9
கானவார் 5
கானவர்கள் 40
கி
கிருபை 58
கிழவன் 3
கிழவன் 5,55
கிளிகள் 63,6,9,47
கீர்த்தி 3
கீரி 4
குங்குமம் 21
குஞ்சு 9
குணம் 4,18
குமரர் 3,55,21
குமரி 3
குரல் 3
குரு 55
குருக்கள் 46
குருதி 40
குலம் 40
குயிலினங்கள் 9
குழல் 42,58
குள்ளநரி 40,50

| | | | |
|---|---|---|---|
| குறத்தி | 4,2 | சங்கரங்கணிகள் | 7 |
| குறமகள் | 27 | சங்கு | 35 |
| குறமான் | 23 | சண்முகர் | 23 |
| குரவர் | 4,5,70 | சந்தனசுனை | 55 |
| கூடு | 9 | சந்தன குங்குமம் | 75 |
| கூடை | 40 | சந்தனதடாகம் | 46 |
| கூவை | 13 | சந்தனம் | 21,54 |
| கூந்தல் | 40 | சந்திரன் | 18 |
| கூர்விழியாள் | 18 | சபை | 12 |
| கேசவன் | 3 | சனகி | 6,67 |
| கை | 11,31 | சாக்குரூபரன் | 76 |
| கைலாசபட்சிகள் | 9 | சாந்தி | 25 |
| கைவளை | 3 | சிங்காரம் | 12 |
| கொச்சிமலை | 40 | சித்திடையாள் | 27 |
| கொடுவாள் | 4 | சித்திரமதனம் | 6 |
| கொம்பு | 42 | சிந்தை | 14 |
| கோடாளி | 4 | சிரை | 33 |
| கோபம் | 55, | சிலம்புகள் | 42 |
| கோலன் | 9 | சிவசங்கரா | 71 |
| **ச** | | சிவமலை | 35 |
| சக்திவேல் | 27,26 | சிவன் | 1 |

| | |
|---|---|
| சிவன்மகன் | 2 |
| சிறுவிரல் | 3 |
| சின்னஇடை | 6 |
| சீரூர் | 80 |
| சீனி | 18 |
| சுடர்கொடி | 3 |
| சுண்டிவிரல் | 49 |
| சுப்பிரமணியர் | 75 |
| சுனை | 74,6,77,53 |
| சுனைநீர் | 82,58 |
| சூரியர் | 18 |
| செங்கை | 2,23 |
| செடி, | 33 |
| செண்பகப்பூ | 18 |
| செண்பகம் | 40 |
| செந்தீ | 3 |
| செழுங்குரவள்ளி | 45 |
| செவ்வலை நீர் | 14 |
| சேலை | 25 |
| சேஷகன் | 18 |
| சேனை | 17 |

**ஞ**

| | |
|---|---|
| ஞாலம் | 9 |

**த**

| | |
|---|---|
| தங்கம் | 7 |
| தடி | 3,58 |
| தண்டை | 42,6 |
| தண்ணீர் | 45,77,46 |
| தணிகவேல் | 21 |
| தணிகை | 1 |
| தணிகைவேலர் | 20 |
| தணிகைவேலன் | 20 |
| தபசி | 71,53 |
| தபசியர் | 37 |
| தம்பிரான் | 53,46 |
| தர்மம் | 48 |
| தவசி | 33 |
| தவம் | 2 |
| தீவம் | 18 |
| தழைகள் | 25 |
| தனம் | 14 |
| தாதியார் | 7,8 |

தாரணி 24
தாலி 3
தானவர் 3
திருத்தணி 32
திருத்தணி வேளவர் 35
திருநகர் 1
திருப்பதி கிரி 16
திருமகள் 3
திருமணி 12
திருமால் மருகன் 18
திலகம் 6
தினப்புனம் 14,61,9
தினைப்புலம் 5
தினைமரபு 42
துணை 16
தும்பை 38
தும்புருநாதர் 80
துணைகள் 46
தொண்டை 34
தெய்வானை 20,75,21,32
தெற்கு 16
தேமலர்கள் 14
தேயம் 2
தேர் 42
தேவர் 5,80
தேவி 18
தேவர்கள் 3
தேவி 75
தேன் 7,44,6
தேனும் மாவும் 39
தையலர் 7
தையல் 6,58
தையலார் 37
தொண்டர் 49
தோகை 35,18,56,72
தோழிமயில் 27
தோசம் 24,32,49

## ந

நடனம் 20
நளசரித்திரம் 14
நாடகம் 1
நாயகி 3
நாரதமுனிவன் 14

நாரதர் 24,14,12,19,22,14
நாரதன் 10,3
நாரை 45
நிதி 22
நிறம் 14
நீதி 2
நீர் 18,58
நீலமலை 40
நீலமான் 13
நீலவர்ணதண்டிறை 14
நெடியோன் 3
நெத்தி 14,6

ப

பகை 61
பங்கையமுகத்தாற் 3
பச்சைமலையாளர் 40
பச்சையப்பிள்ளை 2
பசி 42
பசும்பொன் 26
பஞ்சபாணு 81
பஞ்சனை 75
படம் 11
பண்டாரம் 43
பண்டாரவேஷம் 33
பணம் 70
பத்தினி 33
பயிர் 27
பறன் 8
பரண் 82,14
பரதேறி 55
பல்லொளி 14
பவளமலை 40
பறவை 4
பன்னிருகரம் 18
பன்னிருதோல் 18
பன்னிரு விழி 18
பாசம் 2
பாதம் 2
பாம்பு 3
பார்கடல் 3
பாலன் 2
பாவை 24,3
பாவி 49,60

பாவையர் 3
பாறை 13
பிணி 2
பிதா 3
புகழ் 56
புகழ் 36,35,3
புத்திரன் 18
புதல்வன் 33
புராணம் 53
புருவம் 14
புலி 39,2
புலியூர் 1
புவனம் 3
புள்ளிமான் 82,32,3
புனம் 25,66
புகுனம் 8
புஸ்தகம் 11
புஷ்பம் 3
பூ 18
பூசை 18
புண்நூலோர் 75
பூநூல் 11
பூம 25
பூமி 79
பூரணமாமயில் 18
பூவை 38
பூவையர் 28,58
பெண் 30,61,29
பெண்கள் 49
பெருமாள் 3
பெருமை 62
பேய் 29
பைந்தமிழ் 12
பொட்டு 26
பொற்பகை 2
போனார் 3

ம

மகள் 13
மகளிர் 3
மகுடம் 26
மங்கை 22,70,52,61,6
மங்கையர் 5

| | | | |
|---|---|---|---|
| மணம் | 3 | மாதம் | 2 |
| மதி | 18 | மாதர் | 35 |
| மது | 3 | மாது | 21,5 |
| மதுரம் | 2 | மாலை | 29 |
| மந்திரம் | 3,35 | மால் | 3 |
| மயில் | 6,3,21,14,15,7, | மாமலை | 10,24,3 |
| மயிலவர் | 81 | மாயன் | 13 |
| மயிலினங்கள் | 9 | மார்பு | 55,35 |
| மரம் | 3 | மாவு | 55,44 |
| மருகன் | 3 | மாறி | 49 |
| மலர்பதம் | 8 | மான் | 77,30 |
| மலை | 16,17,3 | மான்கள் | 40,44 |
| மறவர் | 6,66,3 | மானிடம் | 3 |
| மறையோர் | 3 | மானினம் | 29,5,52 |
| மன்மதவேடன் | 26,31,29 | மின்னல் | 18 |
| மனக்குறை | 73 | மீன் | 45 |
| மனம் | 56,28 | முகம் | 14 |
| மனைவி | 23 | முடி | 25 |
| மாஞ்சுனை | 55 | மூக்கலகு | 6 |
| மாணவன் | 3 | முந்தானி | 49 |
| மாணிக்;ம | 26 | முயல் | 40 |

முருகன் 2
முருகேசன் 2
முலைகள் 6
முல்லை 18
முனிநாரதர் 11
முனியன் 3,22
மூக்கழகு 14
மூர்த்தி 3
மூஷீகவாகனம் 2
மெத்தை 75
மேசம் 2
மேஷம் 2
மேற்கு 16
மேனி 13
மைலவர் 61
மைந்தன் 2
மோகம் 61

ய

யானை 74,69

ர

ரகுராமா 67
ரத்தினம் 6
ரஸ்தாளி 18
ராமராமா 32,59
ராமனார் 17
ருத்ராட்சம் 35
ரூபம் 3

ல

லட்சுமி 18
லக்ஷணம் 18

வ

வஞ்சனை 78,81
வஞ்சி 75
வஞ்சியர்கள் 78
வடிவழகு 27,14
வண்ணமணி 16
வயது 70
வயிறு பசிகள் 58
வயிறு 42
வரம் 76
வல்லபாய் நாயகர் 2
வள்ளி 15,3,10,5

வள்ளிக் கிழங்கு 50
வல்லிநயகி 6
வல்லி பங்காளன் 2
வளர்புனம் 70,80
வளையல் 6
வனம் 78,50,57,4,7363,3
வாசம் 41
வானுலோகம் 3
வான் 3,13
வானகம் 64
விண் 45
விதி 48,54,70
விபூதி 35
விமலன் 3
விமலனார் 15
விரல் 17,47
விரம்மனார் 48
விரலழகு 16
விழி 3
விவாகம் 80
வீடு 74
வெண் சாமரம் 75
வெண்மயில் 38
வெள்ளிமலை 15
வெள்ளியின் கிரி 15
வெள்ளைக்கோவில் 18
வெளிமலை 14
வேட்டை 28
வேடப்பெண் 5
வேடம் 24
வேடன் 77,28
வேடிக்கை 3
வேஷம் 28
வேதன் 3
வேலர் 71,70,1

| | |
|---|---|
| வேலலவர் | 14 |
| வேலன் | 2 |
| வேலி | 4 |
| வேளர் | 8,3 |
| வேளர்கள் | 33 |
| வேஷம் | 3,24 |
| வையகம் | 37 |
| வைய்யம் | 18 |

# செய்யுள் முதற்குறிப்பகராதி


| பாடல் | பாடல் எண் |
|---|---|
| அஞ்சவேண்டாம் | 78 |
| அண்டர் கொண் மகளோ | 13 |
| அண்ணாணே தீவனூர் | 65 |
| அந்தணா நாரதர்கேள் | 22 |
| அந்தமான பெண்ணே | 54 |
| அய்யர் கொந்விதியோ | 79 |
| அய்யரே தபசியாரே | 37 |
| அரகரா சிவனேயென்று | 44 |
| மகாரயிந்த அபகீர்த்தி | 71 |
| அரவமே நரைத்து | 66 |
| அருவையே தாதியாரே | 8 |
| அள்ளி அள்ளி | 58 |
| அய்புத விளம்பியாண்டி | 2 |
| அறுவனெடி பெண்ணே | 50 |
| அன்னையாள் சனகி | 67 |
| ஆண்டியார் மார்க்கமெல்லாம்57 | |
| ஆலோலம் கிளிகளாலோலம் | 9 |
| ஆலோலம் யீன்ற | 10 |
| ஆறுமுகமும் பன்னிரு கரமும் | 18 |

| | |
|---|---|
| ஆனையைக் கண்டு | 69 |
| ஆணையைக்கண்டு | 68 |
| இத்தலம் வெள்ளிச்சாரல் | 63 |
| இத்தனை தூரமெல்லாம் | 47 |
| இந்திர செயித்து | 17 |
| இந்திரன்மகளே நல்ல | 20 |
| இப்படிக் கொத்த வார்த்தை | 51 |
| உனக்கு நான் மனைவியாய் | 73 |
| எத்தினி விதத்தினாலும் | 33 |
| ஏழடுக்கு பந்தவிட்டு | 42 |
| என்ன செய்வேன் | 21 |
| என்னாநான் செய்வேன் | 70 |
| கண்டமான விட்டு | 30 |
| கண்டு நாரதனார் | 19 |
| கன்னியா தீர்த்தமாட | 39 |
| கன்னியே வள்ளியாரே | 36 |
| காட்டியே இருந்த | 74 |
| காட்டாயோடோ வள்ளியாரே | 27 |
| காமனார் மேனியாகி | 25 |
| கானகத்து ஆண்டியாரே | 64 |
| குலத்தை நீ சொல்லுமென்று | 40 |

| | |
|---|---|
| குறவரும் குறத்திமாறும் | 4 |
| கைப்படத்தை தான் எடுத்து | 14 |
| சங்கு செகண்டியுங் | 35 |
| சமவிரன் தன்னில் | 23 |
| சரவிளைதன்னில் | 76 |
| சிந்தச் சுனைதனில் | 55 |
| சுண்டி விரல் தந்தேன் | 49 |
| சுனை தனில் அழைத்து | 56 |
| சொன்தோர் வார்த்தை | 80 |
| சோலைக்குள் நடந்து | 53 |
| தண்ணீர் தவிக்குதடி | 46 |
| தர்மமா போகுமென்று | 48 |
| திருநகர் தணிகைமேஷம் | 1 |
| திருப்பதிகிரிக்குத் தெற்கு | 16 |
| நாரதர் வந்தாரே | 12 |
| நாரதர் சொல்லக்கேட்டு | 24 |
| நன்னா நானா | 7 |
| நானாசை கொண்டதும் | 81 |
| பண்டார வேஷங்கொண்டு | 34 |
| பட்டு சிகதாடு கட்டி | 26 |

| | |
|---|---|
| பீரழி மீதினில் | 59 |
| புள்ளிமானினற் | 3 |
| புத்தகமும் பூணூலும் | 11 |
| பெண்ணினை தரிசித்தார்க்கு | 62 |
| பெண்மயில் வள்ளியாரே | 38 |
| மரிந்திடுங்கள்ள ராண்டி | 60 |
| மாலை நான் தான் எயிதேன் | 29 |
| மானினம் ஈன்ற | 5 |
| மானினம் யீன்ற | 52 |
| மானைகேட்ட தோஷம் | 32 |
| மானை நீ தேடிவந்த | 31 |
| மின்னையோர் வேடன் | 77 |
| முழங்கிய கொத்தி | 45 |
| மோகமாகுது பெண்ணே | 61 |
| யீசலும் தின்போம் என்று | 41 |
| வந்தாரே சுப்பிரமணியர் | 75 |
| வந்தாள் வல்லி நாயகி | 6 |
| வள்ளிதான் எங்கே | 82 |
| வாரி வாரி மாக்குடுக்க | 43 |
| வெள்ளியின் கிரியில் | 15 |
| வேடனைப் போலே வேலர் | 28 |

## துணைநூற்பட்டியல்


இராமசுவாமி, மு., தமிழ்நாடகம் நேற்று இன்று நாளை, ருத்ரா பதிப்பகம், தஞ்சாவூர், இரண்டாம் பதிப்பு, 2002.

சம்பந்த முதலியார் பா., நாடக மேடை நினைவுகள், பாகம்-1, சென்னை , 1932.

சௌந்தர பாண்டியன் எஸ்., தமிழில் கீர்த்தனை இலக்கியங்கள், ஸ்டார் பிரசுரம், சென்னை -05 , இரண்டாம் பதிப்பு, ஜீலை-1996.

பரிதிமாற் கலைஞர் ., நாடகவியல், சென்னை, 1897

புஷ்பா. பி.. தமிழில் கீர்த்தனை நாடகங்கள், முத்துப் பதிப்பகம், மாதவி, மதுரை 625 019 , ஜீன் 1980

பெருமாள் எ.என் — இருபதாம் நுற்றாண்டில் தமிழ் நாடகம், ஐந்திணை பதிப்பகம், சென்னை -600 005, டிச. 1996.

பெருமாள் ஏ.ஏன்., — தமிழ்நாகடகத்தின் தோற்மும் வளர்ச்சியும், அணியகம், சென்னை, 1977

பெருமாள் எ.என் — தமிழ் நாடக மேடை அன்றும் இன்றும், செந்தமிழ், மதுரை, 1971.

என்
எழுதுகோலை
இன்றுவரை
எதார்த்ததோடு
எளிமையில்
புதுமையோடும்
இழுத்துச் சென்றுக்கொண்டிருக்கிற
ஆசிரிய பெருமக்களுக்கு
என்
நன்றியை
உரித்தாக்குகிறேன்

நிகரன்...